
# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் | வெள்ளி, மே 31 2019. இதழ் - 65



**கன்னியா விவகாரம் -- சாது மிரண்டால்...**


கன்னியா வெந்நீரூற்று இலங்கையின் ....

பக்கம் - 03



**முஸ்லிம்களின் யதார்த அரசியல், நிலையான சமூக ஒருமைப்பாட்டுக்கு பங்களிக்குமா?**

பக்கம் - 04



**“சேட்டைக் கழட்டுங்க முதல்!” அறியாமையின் ஆணவக்குரல்**

இப்போதுதான் கிழக்கிலங்கையின் தனிச்சிறப்பான கண்ணகிச் சடங்கு ...

பக்கம் -06




**எப்போது இந்த நிலை மாறும்?**

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ...

பக்கம் - 03

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் - உண்மைகளை மூடி மறைக்க முயற்சி



## சட்டத்தரணிகள் சங்கமும் அதிருப்தி

( நி.அமிர்தஸன் )

இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் உண்மைத் தன்மைகளை மூடி மறைப்பதற்காகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டதாக ஜே.வி.பி உறுப்பினர் விஜித ஹேரத் குற்றம் சுமத்தியுள்ளார்.

தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிசர மெண்டிஸ் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு முன்பாக வழங்கிய வாக்கு மூலத்தின்படி ஜனாதிபதியும் பிரதமருமே குற்றவாளிகள் என்றும் அவர் கூறியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக ஏப்பிரல் எட்டாம் திகதி புலனாய்வுத் தகவல் கிடைத்ததாகவும் அதனை பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ, பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோருக்கு அறிவித்ததாகவும் கூறிய அவர், பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்த விடயத்தைக் கூறியபோது கனவம் செலுத்தப்படவில்லையென்றும் சிசர மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

ஆகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் சிசர மெண்டிஸ் இவ்வாறு கூறியுள்ளமையினால் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கமே இதற்கு முழுப்பொறுப்பு என்றும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

அதேவேளை, உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, குற்றவாளிகள் தண்டனை பெறுவதைத் தடுப்பதற்காகவே நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட்டதாக இடதுசாரி முன்னணியின் செயற்பாட்டாளர் சட்டத்தரணி நாமல் ராஜபக்ச கூறியுள்ளார்.

தற்கொலைக் குண்டுதாரி சஹ்ரான் தொடர்பாக ஏப்பிரல் 4 ஆம் திகதி பாயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பணிபாளருக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்ததாக தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிசர மெண்டிஸ் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

தொடர்ச்சி... (பக்கம் -10)

## படகுகளில் அவுஸ்திரேலியா சென்றோர் திருப்பி அனுப்பப்பட்டனர்



சட்டத்துக்கு புறம்பாக படகுகளில் அவுஸ்திரேலியாவுக்கு சென்ற 20 இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

கடந்த வாரம் இவர்கள் படகு மூலம் அவுஸ்திரேலியா நோக்கி செல்ல முற்பட்ட போது அந்நாட்டு பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் மே மாத முதல் பகுதியில் இங்கிருந்து சென்றுள்ளநர். அவர்களில் குழந்தை ஒன்றும் அடங்குவதாக தெரிகிறது.

கடந்த 05 ஆண்டுகளில் அவுஸ்திரேலியா நோக்கி சென்ற முதலாவது இலங்கையர்கள் குழு இது வென்பதுடன், 2013ம் ஆண்டு முதல் அகதிகளாக அவுஸ்திரேலியா சென்ற 186 பேர் இதுவரை இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

## ‘பாடசாலை வதந்திகளை நம்ப வேண்டாம்’




பாடசாலைகளின் பாதுகாப்பு தொடர்பில் பொய்ப் பிரச்சாரம் பரப்பப்படுவதாகவும், அது அடிப்படையற்றது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர கூறியுள்ளார்.

பொய்ப் பிரச்சாரத்தை நம்ப வேண்டாம் என்று பொது மக்களிடம் பொலிஸச பேச்சாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஊழலை ஒழிப்போம்!

அதற்கு எதிராக குரல்கொடுப்போம்

தமிழிலும் இலவச சட்ட ஆலோசனை பெற அழையுங்கள்

011 2 501 503

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

a nation that upholds integrity

நேர்மையின் புகலிடம்

இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு - 05

Email: help@tisrilanka.org Web: www.tisrilanka.org

மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76



## கல்முனையில் மீண்டும் கண் சத்திரசிகிச்சைகள் ஆரம்பம்!



(காரைதீவு நிருபர் சகா)

கல்முனை ஆதார வைத்தியசாலையில் கடந்த மூன்று மாதங்களாக ஸ்தம்பிதமடைந்திருந்த கண்சத்திரசிகிச்சைகள் யாவும் நேற்று முந்தினம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் தெரிவித்தார்.

கண் சத்திரசிகிச்சைக்கூடம் கடந்த 3 மாதங்களாக நவீனமயமாகப் புனரமைக்கப்பட்டுவந்ததே ஸ்தம்பிதநிலைக்கான காரணமாகும் என்றும் அவர் கூறினார். இனிமேல் கண்வில்லை பொருத்துதல் தொடக்கம் சகல கண்சத்திரசிக்சைகளும் கிரமமாக நடைபெறும்.

கண்வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி டாக்டர் எஸ்.பிரேம் ஆனந்தின் வருகையின் பின்னர் சத்திரசிகிச்சைகள் மிகவும் ஜருராக நடைபெற்றுவருகின்றன. கண்நோயாளர்களின் வருகையும் பன்மடங்கு அதிகரித்துள்ளன.

இதேவேளை வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் டாக்டர்.எஸ்.பிரேம் ஆனந்தின்; வேண்டுகோளிற்கு இணங்க வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரனின் ஒருங்கிணைப்பின் பெயரில் லண்டனில் வாழும் கண் வைத்திய நிபுணர் திருமதி ராதா தர்மரெட்ணம் (லண்டன்) அவர்களினால் ரூபா 5 இலட்சம் பெறுமதியான மூக்குக் கண்ணாடி வில்லை மானி FOCI METER உட்பட மேலும் சில உபகரணங்களும் (EQUIPMENTS) நேற்று வழங்கிவைக்கப்பட்டன.

கண் வைத்திய நிபுணர் திருமதி ராதா தர்மரெட்ணம் (லண்டன்) அவர்களின் இந்த அன்பளிப்புப்பொதியை களுவாஞ்சிக்குடி சமூக நலன்புரி சங்கம் நேற்று வைத்தியஅத்தியட்சகர் இரா. முரளீஸ்வரனிடம் வழங்கிவைத்தது.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இரா. முரளீஸ்வரனின் வேண்டுகோளின்பேரில் லண்டனில் வாழும் களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த கண்வைத்திய நிபுணர் டாக்டர் ராதா தர்மரெட்ணத்தின் முயற்சியினால் இவ்வவைத்தியசாலையில் இரு தடவைகள் இலவசமாக ஏழை கண்நோயாளர்களுக்கு கண்வில்லை பொருத்தும் வெண்புரை சத்திரசிக்ச்சைகள் பல லட்சரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வந்தமை தெரிந்ததே.

## திருக்கோவிலில் மீண்டும் கடலரிப்பு: கடலுக்குள் தடுப்பணை!



(காரைதீவு நிருபர் சகா)

திருக்கோவில் பிரதேசத்தில் மீண்டும் கடலரிப்பு ஏற்படத் தொடங்கியுள்ளது. குறிப்பாக திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்திற்கு முன்பாகவுள்ள கடற்பிரதேசத்தில் இவ்வரிப்பு வழமைபோல இடம்பெற்றுவருகிறது.

கரையிலிருந்த கிணறு ஒன்று கடலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. அத்துடன் கரையிலுள்ள அநேக தென்னைமரங்கள் கடலரிப்பினால் விழ ஆரம்பித்துள்ளன.

இக்கடலரிப்பைக் கட்டுப்படுத்த கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் துரித நடவடிக்கை எடுத்துவருகிறது. கடலுக்குள் செங்குத்தாக சுமார் 200 மீற்றர் தூரத்திற்கு கல்தடுப்பணை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கென 400 பாரிய வலைகள் மற்றும் 20வருடங்கள் தாக்குப்பிடிக்கக்கூடிய கல்சாக்குகள் அடுக்கப்பட்டு, இத்தடுப்பணை நிறுவப்படவிருக்கின்றது.

## அம்மனின் எட்டாம் சடங்கில் நூற்றுக்கணக்கான பொங்கல் பானைகள்!

(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப்பிரசித்திபெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்த்திச் சடங்கின் எட்டாம் சடங்கு(27) திங்கட்கிழமை நடைபெற்றது.
பாதுகாப்பை முன்னிட்டு தொண்டர்கள் சோதனை இருந்தபோதிலும் நூற்றுக்கணக்கான பொங்கல் பானைகள் பொங்கப்பட்டன.

பாதுகாப்புக் காரணத்திற்காக நடைபெற்ற எட்டாம் சடங்கிற்காக பொங்கல்பானை வைப்போர் பிற்பகல் 5மணி முதல் பானைகளை ஒப்படைக்கவேண்டுமென ஆலய நிருவாகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க சகலரும் பானைகயை வழங்கி சரியாக 5மணிக்கு பூஜை இடம்பெற்றது

கடந்த 13ஆம் திகதி கதவுதிறத்தலுடன் ஆரம்பமான இவ் வைகாசிச்சடங்கு கடந்த 21ஆம் திகதி அதிகாலை திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவுற்றது.

அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வைகாசிச்சடங்கு நேரகாலத்துடன் நடைபெற்றுமுடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருக்கோவில் பகுதியில் வரட்சியாலும் குழாய் நீர் துண்டிப்பாலும் 20ஆயிரம் பேர் பாதிப்பு!



(காரைதீவு நிருபர் சகா)
'வரட்சியாலும் குழாய்நீர் துண்டிப்பாலும் திருக்கோவில் பிரதேசத்தில் சுமார் 20 ஆயிரம் பேர் மிகமோசமாகப்பாதிக்கப்பட்டுள்ளனர்' என்றும் அவர்களுக்கு பூரணமாகக் குடிநீரை விநியோகம் செய்ய பிரதேசசபையிடம் போதுமான பவுசர் வாகனவசதிகள் இல்லை
என்றும் திருக்கோவில் பிரதேசசபைத் தவிசாளர் இராசையா வில்சன் கமலராஜன் தெரிவித்துள்ளார்.

திருக்கோவில் பிரதேசத்தில் பின்தங்கிய பகுதிகளிலுள்ள பொதுமக்கள் குடிநீரின்றி அலைவதாக கூறப்படுவது பற்றிக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'எமது பிரதேசத்திற்கு பிரதானமாக குடிநீரை விநியோகிக்கின்ற சாகாமம் நீர்ச்சுத்திகரிப்பு மையம் கடந்த ஒரு வாரகாலமாக குழாய்நீர் விநியோகத்தை நிறுத்தியுள்ளது. சாகாமக் குளத்தில் தண்ணீர் வற்றிப்போனமையே அதற்குக் காணரம்.இதனால் எமது பிரதேசத்தில் சுமார் 2350 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரம் பேர் மிகவும் மோசமாக குடிநீரின்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

## உகந்தமலை ஸ்ரீ முருகனாலய ஆடிவேல்விழா உற்சவம்!



(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப்பிரசித்தி பெற்ற உகந்தமலை ஸ்ரீ முருகனாலய வருடாந்த ஆடிவேல்விழா உற்சவம் எதிர்வரும் யூலை 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி யூலை மாதம் 18ஆம் திகதி சமுத்திர தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

கிழக்கின் தென்கோடியில் நாநிலங்களின் மத்தியில் மனோரம்மியமான சூழலில் அமைந்துள்ள இவ்வாலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில்

தொடர்ச்சி... (பக்கம் -05)

## கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை யூன் 27ஆம் திகதி முதல் ஜூலை 9ஆம் திகதி வரை திறந்திருக்கும்!



(காரைதீவு நிருபர் சகா)

"வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவிற்குச் செல்லும்

பாத யாத்திரீகர்களுக்கான காட்டுப்பாதை இம்முறை எதிர்வரும் யூன் 27ஆம் திகதி திறக்கப்படும். மீண்டும் அது ஜூலை 9ஆம் திகதி மூடப்படும்" என அம்பாறைமாவட்ட அரசாங்க அதிபர் டி.எம். எல்.பண்டாரநாயக்க தலைமையிலான முன்னோடி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

உகந்தை முருகனாய ஆடிவேல்விழா உற்சவ முன்னோடிக்கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை(28) அம்பாறை மாவட்டசெயலகத்தில் நடைபெற்றது.

கதிர்காமம் மற்றும் உகந்தமலை முருகனாலயங்களின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் யூலை மாதம் 03 ஆம் திகதி ஆரம்பமாகி 18ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.

கதிர்காமத்திற்கு பாதயாத்திரையாகச் செல்வோர் உகந்தமலை முருகனாலயத்தில் ஓரிரு நாட்கள் தங்கயிருந்துதான் குமண, யால காட்டிற்குள் பிரவேசித்து கதிர்காமத்தைச் சென்றடைவது வழக்கம். அதனால் உற்சவம் மற்றும் பாதயாத்திரை தொடர்பாக பலவிடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

குறித்த 12 நாட்களில் நாட்களில் காலை 6 மணி முதல் பிற்பகல் 3வரை மாத்திரமே காட்டிற்குள் செல்ல யாத்திரீகர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.
தனித்தனியாக அல்லது 5 பேர் சேர்ந்து காட்டுக்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். குறைந்தது 15 அல்லது 20 பேர் அல்லது அதற்கும் அதிகமான தொகையினர் சேரும்போதுதான் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவார்கள். அனைவரும் அடையாள அட்டைகள் கொண்டுவருதல் அவசியம்.

காட்டுப்பாதை யூன் மாதம் 27ஆம் திகதி முதல் 12 நாட்கள் திறந்திருக்கும். அக்காலப்பகுதியில் காட்டுப்பாதையால் பயணிப்போர் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடைசெய்யவேண்டும். அன்னதானம் வழங்குவோர் பார்சலில் வழங்கமுடியாது. மாறாக ஆலய அனுமதியுடன் பீங்கானில் வழங்கவேண்டும். காட்டுப்பகுதிக்குள் எக்காரணம் கொண்டும் அன்னதானம் வழங்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஆலய வளாகத்திலும் அன்னதானம்

தொடர்ச்சி... (பக்கம் -15)

# கன்னியா விவகாரம் -- சாது மிரண்டால்...

கன்னியா வெந்நீரூற்று - இலங்கையின் அழகுகளில் ஒன்றாக வர்ணிக்கப்படும் பகுதி. அதற்கும் மேலாக கிழக்கில் வாழும் மக்களுக்கு இந்த வெந்நீரூற்று குறித்து பாரம்பரியமான ஆன்மீக ரீதியிலான தொடர்பும் உண்டு. இராவணன் மற்றும் குளக்கோட்டன் காலத்துடன் தொடர்புபடுத்தி இதனை அவர்கள் பார்க்கிறார்கள்.

இராவணன், குளக்கோட்டன் காலம் கற்பனையா, புராணமா, இதிகாசமா என்பதற்கு அப்பால் இலங்கை தமிழர்களின் வாழ்க்கையுடன் இது பண்டை தொட்டு பிணைந்துள்ளது என்பதைக் காண்பிக்க இதனை இங்கு கூறுகிறேன்.

ஆனால், இலங்கையின் அகழ்வாராய்ச்சிக்கு பொறுப்பான தொல்பொருள் திணைக்களம் உட்பட அங்கு செயற்படும் சில அரச நிறுவனங்களான வனஜீவராசிகள் திணைக்களம், வனபரிபாலன திணைக்களம், கரையோர அபிவிருத்தி மற்றும் செயற்பாடுகளிற்கான திணைக்களம், மற்றும் வீடமைப்பு அதிகார சபை போன்றவை சிறுபான்மை மக்களின் காணிகளை, பாரம்பரிய வழிபாட்டிடங்களை, மேய்ச்சல் நிலங்களைப் பறிப்பதை ரகசியத்திட்டமாக கொண்டு செயற்படுவதாக சில அரசியல் கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. பெரும்பாலான தமிழ் மக்களுக்கும் இந்த அபிப்பிராயம் பல காலமாக உண்டு. அதற்கு ஆதாரமும் உண்டு.

இதில் தொல் பொருள் திணைக்களம் இந்த வெந்நீரூற்று இருக்கும் பகுதியில் தமிழ் மக்களின் மதச்செயற்பாடுகளுக்கு தடை விதித்து, அங்கிருந்த பிள்ளையார் கோயில் நிலத்தையும் கையகப்படுத்தி வெளியிட்ட உத்தரவு இப்போது விவகாரமாகியுள்ளது.

இப்படியாக தமிழர் பாரம்பரிய மற்றும் பண்பாட்டிடங்கள் கையகப்படுத்தப்படும் நிகழ்வுகள் பல இலங்கையில் நடந்துள்ளன. அவை தொடர்ந்துகொண்டும் உள்ளன. இலங்கை தமிழர் பிரச்சினைக்கான தீர்வில் இவற்றைத் தடுப்பதும் அடக்கம்.

இப்போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரின் தொகுதியான திருகோணமலை மாவட்டத்தில் இது நிகழ்ந்திருப்பதனை ஏனைய பல தமிழ் கட்சிகள் விமர்சித்துள்ளன. அண்மையில் ரணில் தலைமையிலான ஆட்சிக்கு பிரச்சினை வந்தபோது துடித்துப்போய், அதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுத்து பிரச்சினையை தீர்த்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இந்த விவகாரத்தில் பேசாது இருப்பதை அவர்கள் விமர்சித்துள்ளனர். "தனது தொகுதியில் உள்ள ஒரு பொது இடத்தை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க முடியாத சம்பந்தர் அவர்கள், தமிழ் மக்களை எப்படிக் காப்பாற்றப் போகிறார்" என்றும் விடுதலைப்புலிகளுக்கு அடுத்த படியாக தாமே தமிழரின் ஏகப்பிரதிநி என்ற போக்கில் செயற்படும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு இது ஒரு பெரிய தோல்வி என்றும் அவர்கள் விமர்சிக்கின்றனர்.

இவை ஒருபுறம் இருக்கட்டும். இந்தக் குற்றச்சாட்டைச் சொல்வதில் ஏனைய அமைப்புக்களுக்கு அரசியல் லாபமீட்டல் என்ற நோக்கமும் உள்ளது. ஏனெனில், திருகோணமலை மாவட்டம் பறிபோவது என்பது இன்று நேற்றல்ல இரா. சம்பந்தர் அவர்கள் அரசியலுக்கு வருமுன்பிருந்தே நடக்கும் ஒன்று.

உண்மையில் இங்கு பிரச்சினை என்னவென்றால், இப்படியான தமிழர் நிலம் பறிக்கும் பேரினவாதிகளின் நடவடிக்கைகளை தடுப்பதற்கான நீடித்த ஒரு கொள்கையோ அல்லது திட்டமோ தமிழர் தரப்பிடம் இதுவரை இல்லை என்பதே. இன்றல்ல என்றுமே இதற்கான கொள்கை, திட்டம் எதுவும் இவர்களிடம் இருந்ததில்லை. வெறுமனே குற்றஞ்சாட்டி வாக்குகளை பறிக்கும் நோக்கில் மாத்திரமே தமிழ் கட்சிகள் இதுவரை ஈடுபட்டு வந்துள்ளன. இதில் தமிழரசுக் கட்சியும் அடக்கம்; அவ்வளவே.

ஆனால், இனிமேலாவது இவர்கள் இப்படியான பாதக நடவடிக்கைகளை தடுக்க கொள்கை வகுக்கிறார்களா

### சீவகன் பூபாலரட்ணம்

அல்லது திட்டமிடுகிறார்களா என்றால் அதுவும் இல்லை என்பதுதான் இங்கு கவலைக்குரிய விடயம். குற்றஞ்சாட்டும் ஏனைய தமிழர் அமைப்புக்கள் கூட அதனைக் கடந்து செல்லவில்லை. ஒன்றாகச் சேர்ந்து ஏதாவது முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று அழைக்கவில்லை. குற்றஞ்சாட்டுவதோடு நின்று விடுகின்றன. வடக்கு கிழக்குக்கு வெளியே செயற்படும் அமைச்சர் மனோ கணேசன் எடுக்கும் முயற்சிகள் அளவுக்குக் கூட இவர்கள் எதுவும் முயற்சிக்கவில்லை.

இப்படியான கேவலமான போக்கு இன்று நேற்றல்ல, பலகாலமாகவே தமிழர் கட்சிகள் மத்தியில் காணப்படுகின்றன. அடுத்தவரை குற்றஞ்சாட்டி, வாக்குப் பறிக்கும் சிந்தனை மாத்திரமே அவர்களிடம் உள்ளது. எதனையும் திட்டமிட்டு இணைந்து செயற்பட்டு பெற்றுக்கொள்வதற்கான எந்த முயற்சியும் இங்கு இல்லை. குறிப்பாக கிழக்கு மாகாண நலனுக்காக தமிழ் கட்சிகள் இணைந்து செயற்பட வேண்டும் என்ற கோரிக்கை அண்மைக்காலமாக கிழக்கில் அதிகரித்திருக்கும் நிலையிலும் தமிழ் கட்சிகள் இவ்வாறு வாழாவிருப்பது மக்கள் மத்தியில் அதிருப்தியையே ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக கிழக்கு மக்கள் தாம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக நினைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டில் அண்மைய நிலவரங்களில் தாம் அனுபவிக்கும் சிரமங்களுடன் தமது பண்பாட்டு நிலம் பறிபோவதும் அவர்களை விரக்தி நிலைக்கு தள்ளிவிட்டுள்ளது. புதிதாக கிழக்கில் கால் பதிக்கும் புதிய வடக்கு தலைமையைக் கொண்ட கட்சிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. அவர்களும் அதே பழைய "குற்றஞ்சாட்டி வாக்குச் சேகரிக்கும்" பாணியையே கடைப்பிடிக்கிறார்கள். இவை அனைத்தும் உண்மையில் கிழக்கில் ஒரு புரட்சிகர அரசியல் மாற்றம் தேவை என்பதையே வலியுறுத்துகின்றன. கிழக்கு மக்கள் அப்பாவிகள், ஏமாளிகள் என்ற இந்தக் கட்சிகளின் நினைப்பும் இதற்கு காரணமாக இருக்கலாம். ஆனால், சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பதே இந்தக் கட்சிகளுக்கான செய்தியாக இருக்க முடியும்.

---

# எப்போது இந்த நிலை மாறும்?

## பாடசாலைக்குப் போகாமல் ரியூசனுக்கு போனவர்கள்

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று ஈஸ்டர் தினத்தில் நடத்தப்பட்ட பாரிய தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களால் எமது நாட்டில் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. அதனைத் தொடர்ந்து 29ஆம் திகதி அனைத்துப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படும்



என கல்வி அமைச்சு தெரிவித்திருந்த போதிலும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு மே மாதம் 6ம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு இலங்கையில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் பல்லாயிரக் கணக்கான பொலிஸ் மற்றும் இராணுவப் படைவீரர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். பாடசாலைக்குப் புதிய சுற்றுநிருபங்களும் மாணவர் நலன் கருதி அனுப்பப்பட்டு, பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பாடசாலைகள் இயங்க ஆரம்பித்தன. கடந்த 6ம் திகதி பெரும்பாலான பாடசாலைகளுக்கு அனைத்து ஆசிரியர்களும் சமுகமளித்த போதிலும் மாணவர்களின் வரவு மிகக்குறைவாகவே காணப்பட்டது. சரி. பெற்றோர்கள் பயத்தில் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பவில்லை என எண்ணினாலும் அந்த அனர்த்தம் நடந்து ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் ஆகிவிட்டது. எனினும் இன்னும் மாணவர்களின் வரவு இன்னும் சீருக்கு

### "மாற்றத்தை விரும்பும்" மாணவன்"

வந்தபாடில்லை.

அதேவேளை, பிரத்தியேகக் கல்விக்கூடங்களின் மீது எமது கவனத்தைச் செலுத்தினால் பாடசாலைக்குச் சமுகமளிக்காத மாணவர்களில் பெரும்பான்மையானோர் பிரத்தியேக வகுப்புக்களின் வாசலில் நிற்கின்றனர். அதற்கு பெற்றோர்கள் துணை வேறு. வகுப்பு ஆரம்பித்ததிலிருந்து வகுப்பு முடியும் வரை வகுப்பு வாசலில் காத்திருக்கின்றனர். இச் செயற்பாட்டைப் பாடசாலைகளில் செய்யலாமே. எனக்கு ஒன்று மட்டும் புரியவில்லை. அவ்வளவு பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இயங்கும் பாடசாலைக்கு தனது பிள்ளையை அனுப்பத் தயங்கும் பெற்றோர்கள், பிரத்தியேகக் கல்விக்கூடங்களுக்கு ஆர்வத்துடன் அனுப்புவதற்கான காரணம் என்ன? பாடசாலைகளில் கற்பித்தல் முறையாக நடைபெறவில்லையா? அல்லது அதைவிட ரியூசன்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிறப்பாகக் கற்பிக்கின்றனரா? இல்லை, பாடசாலையில் இலவசக் கல்வி. ரியூசன்களில் வியாபாரக் கல்வி என்பதால் பெற்றோர்களின் கண்கள் ரியூசன்களை மட்டும் நோக்குகின்றதா? அவ்வாறு நோக்குகிறது என்றால் அங்கேதான் எமது சமூகம் சிதைவடையத் தொடங்குகிறது.

எமது சமூகமோ மாகாணமோ கல்வியில் பின்னடைவைச் சந்திக்கிறது என்றால் அதற்கு இதுவும் காரணமாகும்.

அன்றைய காலத்தைப் பொறுத்தவரை, மாணவர்களின் வெற்றிக்கு அவர்களின் புத்தகக் கல்வி மட்டுமே போதுமானதாக இருந்தது. ஆனால் இன்றைய போட்டி நிறைந்த உலகில் புத்தகக் கல்வியை மட்டும் வைத்துக் கொண்டு எதனையும் அவர்களால் சாதிக்க முடியாது. செயன்முறைக் கல்வி, அவர்களின் வளர்ச்சிக்கு முக்கியமானது. இந்த செயன்முறைக் கல்வியை பிரத்தியேகக் கல்விக் கூடங்களால் முழுமையாக வழங்க முடியாது. ஏன் பூரணமாகவே வழங்க முடியாது என்று கூறலாம். இச் செயன்முறைக் கல்வியை முழுமையாகப் பாடசாலையால் மட்டுமே வழங்க முடியும். அதற்கு மாணவர்களின் வரவு

தொடர்ச்சி... (பக்கம் -15)

# முஸ்லிம்களின் யதார்த்த அரசியல், நிலையான சமூக ஒருமைப்பாட்டுக்கு பங்களிக்குமா?



இந்தப் பத்தியில் முன்பு ஒரு தடவை சுட்டிக்காட்டியது போல கடந்த 30 வருட தமிழ் - சிங்கள முரண்பாட்டில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் அரசியல், சமூக பொருளாதார, இழப்புக்களை சந்தித்திருக்க இந்த முரண்பாட்டை சரியானவகையில் கையாண்டு ஒப்பீட்டளவில் குறைந்த இழப்புகளுடன் அதிகூடிய அரசியல், பொருளாதார, சமூக நன்மைகளை அடைந்தவர்களாக முஸ்லிம்கள் இருக்கின்றனர். இது பற்றி பேராசிரியர் அமிர் அலி கூட ஒரு கட்டுரையில் முஸ்லிம்கள் யதார்த்த அரசியலையும் தமிழர்கள் உணர்ச்சி அரசியலையும் செய்வதால் தமிழ் பிரதேசங்கள் அபிவிருத்தியின்றியும் முஸ்லிம் பிரதேசங்கள் அபிவிருத்தியுடனும் இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.

தேவாலயக் குண்டு வெடிப்புக்களைத் தொடர்ந்து முஸ்லிம்களின் யதார்த்த அரசியலை பேரினவாத அரசு தனக்கான யதார்த்த அரசியலாக மாற்றியிருக்கிறது.

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்தக் கட்சியுடன் முஸ்லிம் அரசியல் கட்சிகள் கூட்டுச் சேர்ந்து தங்களுக்குத் தேவையான முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களைப் பெற்று அதனூடாக கிடைக்கக் கூடிய அத்தனை வாய்ப்புக்களையும் தமது சமூகத்துக்குப் பெற்றுக் கொடுப்பதில் மிக சாதுர்யமாகச் செயற்பட்டனர். முஸ்லிம்களின் இந்தப் போக்கை தமிழ், சிங்கள முதலாளித்துவமும் பேரினவாதிகளும் பொறாமையுடனும் அச்சத்துடனுமே நோக்கினர். இந்த அச்சத்துக்கு பின்வரும் காரணங்களைக் குறிப்பிட முடியும்.

1. அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம்கள் இருத்தல்

2. பொருளாதார ரீதியாக அவர்கள் முக்கிய சக்தியாக வளர்ந்து வருதல்

3. முஸ்லிம்கள் 1980 களுக்குப் பின்பு கட்டமைத்துக் கொண்டு வரும் அவர்களின் பண்பாட்டு அடையாளங்கள் இலங்கையின் பௌத்த அடையாளத்துக்கு எதிராக இருத்தல்

4. முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சி எதிர்காலத்தில் பௌத்த சிங்களவர்களை சிறுபான்மையாக்கி விடும் என்ற ஐயம்.

இதனை எவ்வாறு கையாள்வது என்பதே பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கு இருக்கின்ற மிகப்பெரிய சவாலாகும். யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் இராணுவரீதியில் முஸ்லிம்களின் தேவையில்லை என்றொரு நிலைவந்தவுடன் பௌத்த சிங்கள அமைப்புகள் வலுப்பெற்றதையும் சிங்களப் பகுதிகளிலிருந்த பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டு 2014ம் ஆண்டு முஸ்லிம் சிங்கள இனக்கலவரம் களுத்துறையில் ஏற்பட்டதும் இதன் வெளிப்பாடேயாகும்.

இதன்போது மகிந்த ஆட்சியில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பதவிகளில் இருந்தாலும் பள்ளிவாசல்கள் தாக்கப்படுவதையும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையினையும் அவர்களால் தடுக்க முடியாதவர்களாகவே இருந்தனர். இதனால் முஸ்லிம் மக்கள் மகிந்த ஆட்சியை விரும்பாதவர்களாகவும் அவருக்கு எதிராக வாக்களிக்கவுமே தயாரான ஒரு சூழ்நிலை உருவானது. தமிழர்களும் மகிந்தவை தோற்கடிக்க வேண்டும் என்ற நிலையில் இருந்தனர். மகிந்தவுக்கு எதிரான தமிழ், முஸ்லிம் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்ட முஸ்லிம் அரசியல் கட்சிகள் தேர்தலில் மகிந்தவை தோற்கடித்து மைத்திரி தலைமையிலான நல்லாட்சியினை உருவாக்கினர்.

நல்லாட்சி உருவாகியிருந்தாலும் சிங்கள முதலாளித்துவ பேரினவாத சக்திகளுக்கு முஸ்லிம்களால் ஏற்படுத்தப்படும் மேற்குறிப்பிட்ட அச்சம் குறித்த காரணங்கள் அவ்வாறே இருந்தன. அதன் வெளிப்பாடே கடந்த வருடம் அம்பாறையில் தொடங்கிய கலவரம் கண்டியில் முடிந்தமையாகும். இருந்தும் முஸ்லிம்களை அடக்குவதற்கும் அவர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கும் சரியானதொரு காரணத்திற்காக சிங்களப் பேரினவாத அரசு காத்துக் கொண்டிருந்திருக்கிறது போல் தெரிகிறது. அதனால்தான் சஹரானின் நடவடிக்கைகளுக்கு எதிராக காத்தான்குடி மக்கள் ஆர்ப்பாட்டங்களைச் செய்து அனைத்து தரப்பினருக்கும் முறைப்பாடுகளைத் தெரிவித்திருந்தும் அரசு அவரைக் கைதுசெய்வதற்கான போதிய நவடிக்கைகளை எடுக்கவில்லை. இது போல வனாத்திவில்லு தென்னந்தோட்டத்தில் கைப்பற்றப்பட்ட வெடிமருந்து தொடர்பாக தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபரையும் கைது செய்வதற்கு முனைப்புக் காட்டவில்லை. குண்டு வெடிப்புக்கு முன் பாலமுனையில் மோட்டார் சைக்கிளை வைத்து ஒத்திகை வெடிப்பு செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்திலும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

சஹரான் போன்று பௌத்த மக்களுக்கும் அரசுக்கும் எச்சரிக்கை விடுத்து தமிழர் ஒருவர் பேசி அவற்றை சமூகவலைத்தளங்களில் வெளியிட்டிருந்தாலோ தமிழர் பகுதியில் வெடிமருந்துகள் மீட்கப்பட்டிருந்தாலோ வெடிப்பு ஒத்திகை ஒன்று நடத்தப்பட்டிருந்தாலோ அந்தப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டு பல முன்னாள் போராளிகள் கைது செய்யப்பட்டு விசாரணைகள் நடந்திருக்கும் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

பாலமுனை ஒத்திகை நடந்தபோது முஸ்லிம் பிரதேசங்கள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடைபெற்றிருந்தால் சஹரானின் ஒல்லிக்குள முகாம் தொடர்பான தகவல்களையாவது இராணுவத்தினர்

**எழுவான் வேலன்**

கண்டுபிடித்து தொடர் நடவடிக்கைகளை எடுத்து 21ம் திகதி குண்டு வெடிப்புகளைத் தடுத்திருக்க முடியும்.

இறுதியாக இந்தியப் புலனாய்வு அதிகாரிகளின் புலனாய்வு அறிக்கையினைக் கூட கருத்தில் எடுத்துச் செயற்படவில்லை. இவையெல்லாம் எதனைக் காட்டுகின்றது என்றால் 'ஓடு மீன் ஓட உறுமீன் வரும்வரைக்கும் வாடியிருக்குமாம் கொக்கு' என்பது போல முஸ்லிம்களை ஒரே அடக்காய் அடக்குவதற்கு வலுவான காரணம் ஒன்று உருவாகும் வரை காத்திருந்திருக்கிறார்கள். அந்தக் காரணத்தை வைத்து முஸ்லிம்கள் தொடர்பான அனைத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்ற நிலையிலேயே இருந்துள்ளனர். ஆனால் பொதுமக்கள் மீது இவ்வளவு பாரியளவிலான தாக்குதலொன்றைச் செய்வார்கள் என எதிர்பாக்காமல் இருந்திருக்கலாம்.

இதனால்தான் தாக்குதலுக்குப் பின் அரசு முஸ்லிம்கள் மீதான தனது அதிகாரத்தினைக் காட்டுவதற்கும் அந்த அதிகாரத்தினை எதிர்ப்பவர்களை அடையாளம் கண்டு கொள்வதற்குமான முதல் நடவடிக்கையாக தாக்குதலுக்கு எவ்விதத்திலும் தொடர்பற்ற முஸ்லிம் பெண்களின் ஆடை தொடர்பான நடவடிக்கையினை எடுத்தது. சாதாரண நிலையில் முஸ்லிம்களின் ஆடை தொடர்பாகவோ அவர்களின் அடையாளங்கள் தொடர்பாகவோ நடவடிக்கை எடுத்திருக்குமாயின் அனைத்து முஸ்லிம் அரசியல் தலைவர்களும் அவர்களுடைய மத நிறுவனங்களும் முஸ்லிம் பொதுமக்களும் வீதியில் இறங்கியிருப்பார்கள். அது அரசின் இருப்பை கேள்விக்குறியாக்கியிருக்கும். ஆனால் தற்போது முஸ்லிம் அரசியல் தலைவர்களும் அவர்களின் மத நிறுவனங்களும் எவ்வித எதிர்ப்பையும் வெளிக்காட்டாததுடன் இஸ்லாம், முகத்தை மறைக்கும்படி கூறவில்லை என்று நியாயம் சொல்லி பொதுமக்களை அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்கள்.

அத்துடன் வெசாக் கூடு கட்டவும் பௌத்த கொடிகளை ஏந்தவும் பூத்தட்டுக்களை ஏந்தி புத்தபெருமானை தரிசிப்பதற்கு அனுமதித்திருக்கிறார்கள். தங்களுடைய மதநிலை கடந்து யதார்த்த அரசியலுக்காக எந்த விட்டுக்கொடுப்பையும் செய்வதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். இது அரசுக்குக் கிடைத்த முதல் வெற்றியாகும்.

அடுத்து எவ்வாறு முன்பு தமிழர்கள் எல்லோரும் புலிகளாகப் பார்க்கப்பட்டார்களோ அதே போன்று முஸ்லிம்கள் எல்லோரும் இஸ்லாமியப் பயங்கரவாதிகளாகப் பார்க்கப்படுகின்ற சூழல் உருவாக்கப்பட்டு விட்டது. இதனால் அந்த முத்திரையைக் கொண்டு எந்த முஸ்லிமின் அடிப்படை உரிமைகளையும் மீறமுடியும் அவர்களின் மத அடையாள கட்டமைப்புகளையும் கட்டுப்படுத்த முடியும். ஹிஸ்புல்லாவின் பல்கலைக் கழகம் படுகின்ற பாடு இதற்கு உதாரணமாகும்.

மேலும் அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம்கள் இருப்பது அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றது. எந்த ஒரு உறுப்பினர் மீதும் இல்லாமியப் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படலாம். விஜயகலா மகேஸ்வரன் எதிர்நோக்கிய சிக்கல்களை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்கொள்வர். அதன் ஆரம்பமே ரிசாட் பதியுதீனுக்கான நம்பிக்கையில்லாப் பிரேரணையாகும்.

சிங்கள பேரினவாத முதலாளித்துத்தை மிஞ்சிக் கொண்டு எந்த இன முதலாளிகளும் முன்னுக்கு வரக்கூடாது என்பது கடந்தவார வன்முறையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்தவாரம் நன்கு திட்டமிட்ட முறையில் முஸ்லிம் வர்த்தகர்களுக்குச் சொந்தமான பல ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான அவர்களின் வர்த்தக ஸ்தாபனங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இது போன்றே 1815ம் ஆண்டு, 1956ம் ஆண்டு, 1983ம் ஆண்டு கலவரங்களின் போது முஸ்லிம் தமிழர்களின் பொருளாதாரம் அழிக்கப்பட்டது. இனமோதலைத் தூண்டி சிறுபான்மையினரின் பொருளாதாரத்தினை அழிப்பதுவே சிங்கள பேரினவாத முதலாளித்துவத்தின் நிகழ்ச்சித் திட்டங்களில் பிரதானமானதாகும்.

இவ்வாறு சிங்கள பௌத்த பேரினவாதத்தின் நிகழ்ச்சித் திட்டம் அது தமிழர்களாக இருந்தாலும் சரி முஸ்லிம்களாக இருந்தாலும் சரி தம்மை மீறி வளரக்கூடாது என்பதில் மிகக்கவனமாகச் செயற்படுகின்றது. தமிழர்களை அடக்குகின்றபோது முஸ்லிம்களை தம்பக்கம் வைத்துக் கொள்வதும் முஸ்லிம்களை அடக்குகின்றபோது தமிழர்களை தம் பக்கம் வைத்தக் கொள்வதும் இவர்கள் கையாளும் தந்திரமாகும். இந்தத் தந்திரத்துக்கு முஸ்லிம், தமிழ் அரசியல் தலைமைகள் தங்களின் சுயநலனுக்காக சோரம்போய் அப்பாவி சிங்கள,தமிழ்,முஸ்லிம் மக்களை பலிக்கடாக்களாக்கும் அரசியலே நடந்து வந்திருக்கின்றது.

1815ம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான 200 வருடங்களுக்கு மேற்பட்ட இந்த இனவாத அரசியல் வரலாற்றிலிருந்து நாம் எதையும் கற்றுக்கொண்டவர்களாகத் தெரியவில்லை. நாம் எப்போது சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடமிருக்கும் இனவாத முதலாளித்துவ கட்சிகளை தூக்கியெறிந்து விட்டு வலுவான அரசியலொன்றை கட்டியெழுப்பப் போகின்றோமோ அன்றுதான் இலங்கையின் உண்மையான இனங்களுக்கிடையிலான பரஸ்பர நம்பிக்கையும் உறவும் நிலையானதாக அமையும் இல்லாவிடில் காலத்துக்குக் காலம் இனக்கலவரங்களில் பெறுமதியற்ற உயிர்களையும் பல ஆயிரம் கோடி பெறுமதியான சொத்துக்களையும் இழப்பது தொடர் நிகழ்ச்சியாவதோடு எமது சந்ததியினருக்கு சுபீட்சமான இலங்கையினை வழங்கமுடியாதவர்களாகவே இருப்போம்.

# சொல்லத் துணிந்தேன்! 09

"கடந்த ஒக்டோபர் 26ஆம் திகதியிலிருந்து நவம்பர் 9ஆம் திகதிவரை மூன்று தடவைகள் அரசியலமைப்பை மீறி ஜனாதிபதி அவர்கள் செயற்பட்டபோது நீதிமன்றத்தை நாடி அரசியலமைப்பை பாதுகாக்கும் வகையில் நாங்கள் செயற்பட்டோம்" என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரான பா.உ சுமந்திரனின் கூற்றை அச்சு ஊடகமொன்றில் வாசிக்க நேர்ந்த போது விசனமாயிருந்தது.

1972இல் அரசியலமைப்பு நிர்ணய சபையில் அன்றிருந்த தமிழரசுக் கட்சியால் முன்மொழியப்பெற்ற அத்தனை பிரேரணைகளையும், அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பெற்ற அதிகுறைந்தபட்ச ஆறு அம்சக் கோரிக்கையும் நிராகரிக்கப்பெற்ற நிலையில் எஸ். ஜே.வி.செல்வநாயகம் (தந்தை செல்வா) தலைமையிலான தமிழரசுக்கட்சி அரசியலமைப்பு நிர்ணய சபையிலிருந்து வெளியேறியது. அன்று சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கம் நிறைவேற்றிய குடியரசு அரசியலமைப்பைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதன் அடையாளமாகத் தந்தை செல்வா அவர்கள் குடியரசு அரசியலமைப்பின் பிரதியை யாழ் முற்றவெளியில் பகிரங்கமாக தீயிட்டுக் கொளுத்தினார். மட்டுமல்லாமல் தனது காங்கேசன்துறைத் தொகுதி பாராளுமன்ற ஆசனத்தை இராஜினாமா செய்து இடைத்தேர்தலுக்கு வழிவகுத்து அரசாங்கத்திற்கு சவால்விட்டு மீண்டும் போட்டியிட்டு வென்று 1972ஆம் ஆண்டின் புதிய குடியரசு



அரசியலமைப்பைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை எண்பித்தார்.

அதேபோன்றுதான் 1978இல் பிரதமர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான யூ.என்.பி அரசாங்கம் நிறைவேற்றிய நிறைவேற்று ஜனாதிபதி முறை ஆட்சி அரசியலமைப்பைத் தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை தனது நீண்ட உரையின் மூலம் அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் அ.அமிர்தலிங்கம் அவர்கள் எடுத்துக்கூறியபின் அவரது தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர். இரா.சம்பந்தன் அவர்களும் அவ்வாறு வெளிநடப்புச் செய்தவர்களுள் அடக்கம்.

தமிழ்த் தேசிய அரசியலின் இவ்வாறான வரலாற்றுப் பின்புலத்தில் சுமந்திரனின் மேற்படி கூற்றை வைத்து பார்க்கும்போது ஒரு தத்துவார்த்த அரசியல் முரண்பாடு தெரிகிறது. தமிழ் மக்களால் நிராகரிக்கப் பெற்ற - தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாத ஒரு அரசியலமைப்பை பாதுகாத்த தற்போதைய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தத்துவார்த்த அரசியல் தளம் எது? என்ற கேள்வி எழுகிறது.

2010இல் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் (தமிழரசுக்கட்சியின்) தேசியப்பட்டியல் ஆசனத்தின் மூலம் தமிழ்த் தேசிய அரசியலுக்குள் இரா.சம்பந்தனால் இழுத்துவரப்பட்ட சுமந்திரனுக்கு இதன் தாற்பரியம் விளங்காததில் ஆச்சரியம் இல்லை.

ஆனால் ஆரம்பத்திலிருந்தே தமிழரசுக்கட்சியின் தொண்டர்களாக இருந்து, இன்று அரசியலில் முன்னணிக்கு வந்துள்ள தமிழரசுக்கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசாவிற்கும் செயலாளர் கி.துரைராசசிங்கத்திற்கும் இந்த தத்துவார்த்த அரசியல் முரண்பாடு புரியாமல் போனது ஏன்?

உத்தேச புதிய அரசியலமைப்பு மூலம் வடக்குகிழக்கு மாகாணங்கள் இணைந்த அதிகாரப்பகிர்வு அலகைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில்தான் (அது வராது என்ற போதிலும் கூட) 'நல்லாட்சி' அரசாங்கத்தினதும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களினதும் பதவிக்காலத்தைப் பாதுகாப்பதற்காக நீதிமன்றத்தை நாடினோம் என்று சுமந்திரன் சொல்லியிருந்தால் கூட அதில் ஒரு நியாயம் இருந்திருக்கும். ஆனால் அப்படியல்ல சுமந்திரனின் மேற்படி கூற்றில் பாரிய தத்துவார்த்த அரசியல் முரண்பாடு உள்ளது.

சுமந்திரன் மற்றும் இரா.சம்பந்தன் ஆகியோரின் சட்ட அறிவு மற்றும் ஆங்கில மொழிப்புலமையின்

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

முன் தாழ்வுச்சிக்கலால் மாவை சேனாதிராசாவும் கி.துரைராசசிங்கமும் பலவீனப்பட்டுப்போய் வாயடைத்து நிற்கின்றார்களா என்றும் எண்ணத் தோன்றுகிறது. இதனால் இரா.சம்பந்தனால் அவர்களினதும் சுமந்திரனதும் அரசியல் தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்தும் திராணி தற்போதைய தமிழரசுக்கட்சியின் தலைமைப்பீடத்திற்கு இல்லை என்றாகிறது. தமிழரசுக்கட்சியின் தலைமைப்பீடம் தலையாட்டி பொம்மை ஆகிவிட்டது.

தத்துவார்த்த அரசியல் தளத்தையும் கட்சிக் கட்டுக்கோப்பையும் மக்கள் நலநாட்டத்தையும் கைவிட்டு விட்டு வெறுமனே 'முகவர்' அரசியல் நடாத்தி 'வாக்ககுப்பெட்டி' அரசியல்வாதிகளையே உற்பத்தி செய்து கொண்டிருக்கும் தற்போதைய தமிழரசுக்கட்சி தன்னை ஒருபோதும் இனித் திருத்திக் கொள்ளப்போவதுமில்லை. மக்களும் தமிழரசுக்கட்சியை இனித் திருத்த முடியாது. மக்கள்தான் இனித் திருந்த வேண்டும். மாற்று அரசியல் தலைமையை மக்கள் இனி அடையாளம் காணவேண்டும். இதுவே தமிழ்மக்களின் இன்றைய அவசர அரசியல் தேவையாகும்.

தொடர்ச்சி...

## உகந்தமலை ஸ்ரீ முருகனாலய ஆடிவேல்விழா உற்சவம்!

கிரியைகள் யாவும் நடைபெறும். கொடியேற்றத்திருவிழாவன்று மலைத்திருவிழா, மயில்திருவிழா, தேர்த்திருவிழா போன்ற சிறப்பு திருவிழாக்கள் நடைபெறும்.

அன்றைய தினம் காரைதீவு, உகந்தை யாத்திரீகர் சங்கத்தினரின் அன்னதான நிகழ்வு காரைதீவு மடத்தில் இடம்பெறும்.

தேசத்துக்கோவில் என்பதால் பல ஊர்களின் உபயகாரர்கள் 15நாள் திருவிழாக்களையும் பொறுப்பெடுத்துள்ளனர்.

பகல்திருவிழா காலை 7மணி தொடக்கமும் இரவுத்திருவிழா மாலை 5மணி தொடக்கமும் இடம்பெறும். விழாக்காலங்களில் விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆலய ஆடிவேல்விழா தொடாத்பில் இறுதிக்கட்டக் கூட்டமொன்று எதிர்வரும் 10ஆம் திகதி ஆலய வளாகத்தில் ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்க தலைமையில் நடைபெறும்.

## இலங்கை நாணய நிலை



இந்த வருடத்தில் இதுவரையிலான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு அமைவாக இலங்கையின் ரூபா 3.8 சதவீதத்தினால் வலுவடைந்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் காலாண்டு பகுதியில் இலங்கையின் ரூபா அமெரிக்க டொலருக்கு அமைவாக வீழ்ச்சி அடைந்து வந்தது.

இந்த வருடத்தில் முதல் காலாண்டு பகுதியில் அடிக்கடி இலங்கை ரூபா இவ்வாறு பெறுமதி வீழ்ச்சி அடைந்த போதிலும் பொதுவாக ரூபாவின் பெறுமதி தற்பொழுது அதிரித்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

உயிர்த்தெழுந்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு பின்னர் அமெரிக்காவின் டொலருக்கு அமைவாக இலங்கை ரூபா குறுகிய காலத்தில் வீழ்ச்சி அடைந்தது. இருப்பினும் இந்த பின்னடைவில் தற்பொழுது முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது,

நேற்றைய தினம் அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 174.16 ரூபாவாக அமைந்திருந்தது. இதன் விற்பனை விலை 178.11 ரூபாவாக காணப்பட்டது.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்கவில்லை



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் 2019 ஏப்ரல் 08ம் திகதி பொலிஸ்மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளின் மாதாந்த கூட்டத்தில் பயங்கரவாத திட்டம் தொடர்பில் தகவல் கிடைத்திருப்பதாக எந்த அதிகாரியும் ஜனாதிபதிக்கு அறிவிக்கவில்லை என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள ஜனாதிபதி ஊடகப் பிரிவு இதனைக் கூறியுள்ளது.



# இழிநிலையன்றி வேறென்ன?

## சங்கிலியனுக்கும் அம்பாறைக்கும் என்ன தொடர்பு?

யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனின் 400ஆவது நினைவு தினத்தை இலங்கையின் சிவசேனா அமைப்பினர் அனுஷ்ட்டிக்கின்றனர். மறவன்புலவு சச்சிதானந்தன் என்பவர் இந்த அமைப்பை ஸ்தாபித்து இயக்கி வருகின்றார்.

ஒரு காலத்தில் 'சிங்களவனோடு சேர்ந்து வாழ முடியாது தனித்தமிழ் ஈழம் வேண்டும்' என்று ஈழத்தமிழர்களிடையே தமிழீழக் கனவை விதைத்தவர்களில் இந்த சச்சுதானந்தமும் ஒருவர். தமிழாராட்சி மாநாட்டு படுகொலையுடன் தமிழீழத்துக்காக இளைஞர்களை ஆயுதமேந்த வைத்துவிட்டு இந்தியாவுக்கு தப்பிச்சென்றவர் இவர்.

அந்த அழகான கற்பனைக்காக பல்லாயிரம் பேர் மாண்டு எல்லாம் முடிந்து விட்டது. இப்போது 40 வருடங்களுக்கு பின்னர் இந்தியாவில் இருந்து திரும்ப வந்து, எதுவுமே நடைபெறாததுபோல மத வெறியைப் பரப்ப முயல்கின்றார் இந்த சச்சுதானந்தன்.

மத உரிமைகள் என்பது தத்தமது வாழ்க்கை சார்ந்தது. ஆனால் அதுவே அடுத்தவர்களின் வாழ்வியலை பாதிக்கும் வண்ணம் கருத்துக்ளை பரப்ப முயன்றால் அது மத வெறியாக மாறிவிடுகின்றது.

இனவாத அரசியலினால் அனைத்தையும் இழந்த பின்னர் எதிர்காலம் குறித்து எவ்வித நம்பிக்கைகளும் இன்றி கையறு நிலையில் இன்று தமிழ் சமூகம் நிற்பதற்கு ஒரு காலத்தில் சச்சு போன்றவர்கள் விதைத்த இனவாத கருத்துக்களே காரணமாகும். இந்த தமிழர்களை மீண்டும் மதவாத அரசியல் சாக்கடைக்குள் இறக்க இந்த சிவசேனா முயன்று வருகின்றது என்பதையிட்டு நாம் கவனம் கொள்ள வேண்டிய அவசியமுண்டு.

இந்தியாவின் இந்த சிவசேனாவும் சங்கிலியன் விழாவுக்காக இலங்கைக்கு சச்சிதானந்தத்தால் அழைத்துவரப்பட்டுள்ள இந்து மக்கள் கட்சியும் சிறுபான்மை மதங்கள் மோசமான மீது இனவெறியை பரப்பிவருகின்ற சக்திகளாகும்.

அதனடிப்படையில் இவரது செயற்பாடுகளின் பின்னணியில் இந்தியாவில் கோலோச்சுகின்ற இந்துத்துவ அமைப்புக்கள் இருப்பது பகிரங்கமாகின்றது. தமது மக்களிடையே பிளவுகளை உருவாக்கி ஏனையவர்கள் மீது வெறுப்பு அரசியலை உருவாக்குவதற்காக வரலாற்றையும் மதத்தையும் இவர்கள் கையிலெடுக்கின்றனர்.

ஈழத்தில் உள்ள தமிழர்களிடையே இந்தியாவில் வன்முறை சக்திகளாக இயங்கும் 'இந்துப்பாசிசம்' பற்றிய புரிதல்கள் மிக குறைவு என்பதனால் சைவம், இந்து, தமிழர் என்று எல்லாவற்றையும் போட்டு குழப்பி அரசியல் செய்யும் சச்சிதானந்தம் போன்றவர்களின் சதிக்கு எமது இளையவர்கள் இலேசாகப் பலிக்கடாவாகும் வாய்ப்புகள் அதிகமுண்டு.

தற்போது இந்த சிவசேனா அமைப்பானது இந்தியாவின் மத வெறியர்களது ஆதரவுடன் யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனின் பெயரை முன்வைத்து களமிறங்கியுள்ளதால் இலகுவாக தமிழ் மக்களிடையே இவர்களது 'ஆபத்தான பாசிஸ அரசியல்' மெல்ல முளைவிட தொடங்குகின்றது.அதன் வெளிப்பாடுதான் "சங்கிலியன் தமிழ் மன்னன் தானே? அவனை நினைவு கூருவதில் என்ன தவறு? எமது வரலாறுகள் எமக்கு முக்கியம்தானே?" என்று எழுப்பப்படும் கேள்விகளாகும். மேலோட்டமாகப் பார்க்கின்றபோது இக்கேள்விகளில் நியாயம் இருப்பதாக தோன்றும். தமது இனத்தின் வரலாறுகளை தெரிந்துகொள்ளாத எந்த இனமும் முன்னேற முடியாது என்பதும் உண்மைதான்.

ஆனால் மனித குலத்தின் மேம்பாட்டுக்கு எதிரான ஆதிக்க சக்திகளின் வரலாறுகளை ஏக மக்களின் வரலாறுகளாக கற்பிதம் செய்வதும், அதனை போற்றுவதும், மதத்தோடு இணைத்து ஒரு இனத்தின் வரலாற்றை ஒற்றை பார்வைகளில் பார்க்கமுயல்வதும் பிற்போக்குத்தனத்தின் வெளிப்பாடு ஆகும். மத உரிமை என்பது வேறு, மத வெறி, வெறுப்பு அரசியல் என்பன வேறு.

**ஞானம்**

சங்கிலியன் என்பதுவும் நல்லூர் என்பதுவும் யாழ்ப்பாண-சைவ வேளாள ஆதிக்கத்தின் குறியீடாகும். அதனை முன்னிறுத்தி ஈழத் தமிழரின் வரலாற்றை எழுத முனைவதும், அதனை பொதுமைப்படுத்தி ஏனைய வரலாறுகளை விளிம்புநிலைக்கு தள்ளுவதும் இந்து சனாதன அதிகார மையத்தை கட்டமைப்பதாகும்.

இலங்கையில் சிவசேனாவின் உருவாக்கம் என்பது இந்தியாவில் உருவாகிவரும் ஜனநாயகவிரோத இந்து பாசிச சர்வாதிகாரத்தின் நீட்சியாகும். அதன் எடுபிடிகளாக இந்த சச்சுதானந்தம் போன்றோர் இலங்கையில் செயற்பட முனைகின்றார்கள் என்பதை எமது மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நல்லூர் இராசதானி என்பது வன்னிப்பிரதேசத்தை தாண்டாதது. ஆனால் இந்த இரசதானியை ஆண்ட சங்கிலியனை வடக்கு கிழக்கின் சகல பிரதேசங்களினதும் மன்னனாக காட்டிட

தொடர்ச்சி... (பக்கம் -15)

---

# “சேட்டைக் கழட்டுங்க முதல்!” அறியாமையின் ஆணவக்குரல் --01

## (கோயிலில் சேட்டைக் கழற்றுவது அவசியமா?)

**இப்போதுதான் கிழக்கிலங்கையின் தனிச்சிறப்பான கண்ணகிச் சடங்கு பருவ காலம் இனிதே நிறைவுற்றிருந்தது. அதன் பின்னணியில் ஆரையம்பதி முதல் தம்பிலுவில் வரை 15 கண்ணகி அம்மன் ஆலயங்களை ஒரே நாளில் தரிசிக்கும் வாய்ப்பு இந்தக் கட்டுரையாளனுக்குக்கிடைத்திருந்தது. நாட்டின் தற்போதைய சூழ்நிலைமை காரணமாக வழக்கமான கொண்டாட்ட மனநிலையைஎந்த ஊரிலும் காண முடியவில்லை என்றாலும், அந்தப் பருவ காலத்துக்கே உரிய இயல்பான மலர்ச்சியை எங்குமே தவறவிட்டதாகத் தெரியவில்லை.**

**எனினும், இந்த ஆண்டு குறிப்பாகக் கண்ட ஒரு விடயம் அதிகமாக உறுத்தியது. சுமார் 5இற்கு மேற்பட்ட கண்ணகி ஆலயங்களில் "ஆண்கள் மேலாடையின்றி உட்செல்லவும்" எனும் அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டிருந்தது. இவற்றில் எத்தனை ஆலயங்களில் இந்த வழக்கம் நீண்ட நாட்களாகக் கடைப்பிடிக்கப்படுகிறது என்பது தெரியவில்லை. அந்த அறிவிப்புக்குப் பல இடங்களில் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியதையும் காணக்கூடியதாக இருந்தது.**

**"அமைச்சரே ஒரு புறாவுக்கு அக்கப்போரா? ஆம்பிளேல் தானே? சேட்டக் கழட்டுறதில என்ன பிரச்சினை வருது? அதுக்கு நீ மினக்கெட்டு குந்திரிந்து ஒரு கட்டுரையே எழுதுற அளவுக்கு நிலைமை என்ன மோசமா போய்ற்றுது?" என்று நீங்கள் அங்கலாய்ப்பது தெரிகிறது. கொஞ்சம் பொறுமையாக வாசிச்சு முடிங்களன்!**

**இந்தியாவில், கோவில்களில் ஆண்கள் மேலாடையின்றி உட்செல்வது, கேரளத்துக்குமட்டும் சிறப்பான ஒரு வழக்கம். (தமிழகத்திலே அந்தக் கட்டுப்பாடு பொதுவாகஇல்லை!) எனினும் தென்னகத்தில் இந்த வழக்கம் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படாத ஆலயங்களிலும் கூட, ஆலயத்தின் உள் மண்டபங்களுக்குள் நுழையும்**



**போதும், வாகனம் காவுதல், தோத்திரம் பாடல் முதலான வழிபாட்டு முறைகளின் போதும் மட்டுமாவது, அதைச் செய்யும் ஆண்கள் மேலாடை அணிந்திருக்கக்கூடாது என்பது பொதுவான விதி.**

**ஈழத்தில், இந்த விதியை ஒழுங்காகவும் அழகாகவும் கடைப்பிடிக்கும் பண்பாட்டு நிலம், யாழ்ப்பாணம். கிழக்கிலோ வன்னி நிலப்பரப்பிலோ, இந்த விதியில் அத்தனை இறுக்கம் காட்டப்படுவதில்லை. அப்படி இறுக்கம் காட்டப்படும் ஆலயங்களையும் விரல் விட்டு எண்ணி விடலாம்.**

**இப்போது பிரச்சினை என்னவென்றால், புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கொண்ட கதை போல, கிழக்கின் பல ஆலயங்களில் இந்த வழக்கம் கட்டாயமாக்கப்பட்ட ஒன்றாக மாறி வருகிறது. திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் கடந்த ஆண்டு குடமுழுக்கு இடம்பெற்றபோதும்இந்த வழக்கத்தைப் புதிதாகக் கொணர்ந்தார்கள்.**

**ஊர்மக்கள், இளைஞர்கள் பலரின் எதிர்ப்பின் மத்தியில் அது பிசுபிசுத்துப்போயிற்று. இப்போது அங்கு யாரும் மேலாடையைக் கழற்ற நிர்ப்பந்திக்கப் படுவதில்லை.**

**கிழக்கில் இந்த ஆடைக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய ஆலயங்களின் திருவிழாக் காலத்தில் கோவில் சார்பான ஒருவர் வாசலில் நின்று "ஆம்பிளேல் சேட்டக் கழட்டுங்க" என்று உத்தரவிட்டுக் கொண்டிருப்பார். சில ஆண்கள் உள்மேலாடை பெனியனுடன் நுழைய அவர் பார்த்தும் பாராமல் இருப்பார். ஆனால் அடுத்ததாக உள்மேலாடையுடன் நுழையும் ஒருவரை இவர் தடுத்து நிறுத்துவார். "அவன போக விட்டனீங்க தானே" என்று இவர் எகிறிப்பாய்வார். அவர் விடாப்பிடியாக அதையும் கழற்றச் சொல்ல, இது பிறகு தன்மானப் பிரச்சினையாக மாறும்.**

**ஒன்று, அவர் பேசாமல் உள்மேலாடையையும் கழற்றி விட்டு இவரை முறைத்தபடி உள்ளே செல்வார். அல்லது, கூவி ஆர்ப்பாட்டம் பண்ணி, மீண்டும் மேலாடையை அணிந்து கொண்டு "உங்கட சாமிய நீங்களே வச்சிக்கொள்ளுங்க" என்றபடி வெளியேறிவிடுவார். இது இப்போதெல்லாம் நான் அடிக்கடி காண்கின்ற சம்பவங்களுள் ஒன்றாக மாறி இருக்கிறது.**

**திருவிழாக்காலம் என்று இல்லாமல், இதை இப்போது அன்றாடவழக்கமாக அமுல்படுத்தியுள்ளகிழக்குக்கரைக் கோவில்களில் வேறொரு சிக்கலைக் காண்கிறேன். அந்தக்கோவில்களில் திருமணவைபவம் நிகழும்போது, எல்லோரும் மேலாடையோடு அனுமதிக்கப்படுகிறார்கள். அல்லது பொலீஸ், இராணுவம், மாணவர்கள் போன்றோர் நுழைய முற்படும்போது, சீருடையைக் காட்டி உள்நுழையஅனுமதிக்கப்படுகிறார்கள். “விதி என்றால் எல்லாருக்கும் ஒன்றாகத்தானே இருக்கவேண்டும்?”என்று கோபத்தோடு கேட்கிறார்கள் அடியவர்கள். ஆக, இந்தக் கேள்விக்கான பதில்தான் என்ன? கோவிலுக்குள் நுழையும்போது ஆண்களின் மேலாடையைக் கழற்றச் சொல்வது சரியா? பிழையா?**

**சரி, பிழை கூறுவதற்கு முதல், இந்த வழக்கம் எப்படித் தோன்றியிருக்கிறது என்பதை அறிவது நலம். தமிழ்த் திரைப்படங்களில் பார்த்திருப்பீர்கள். நாட்டாமை வரும் போது, வேலைக்காரன் மடித்துக்கட்டியிருக்கும் வேட்டியை அவிழ்த்து கீழிறக்கி விடுவதை, தோளில் கிடக்கும் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொள்வதை. பொருளாதாரம், அந்தஸ்து என்பவற்றில் உயர்ந்த ஒருவரை காணும் போது, அவருக்கு மரியாதை செலுத்தும் விதமான சைகைகள் இவை.**

**பெருங்கோவில்கள் அமைக்கப்பட்டபோது அங்கு நிறுத்தப்பட்ட இறைவர்கள், அரசனாலேயே போற்றப்பட்டனர். ஆகவே, அரசர்களுக்கே அரசனான இறைவன் முன் ஒரு சாதாரண குடிமகன் எப்படிநிற்கவேண்டும்? அரசன்முன் நிற்பது போலவே அவர்களில் கிடக்கும் சால்வையை இடையில் கட்டிக்கொண்டார்கள்.**

**வி.துலாஞ்சனன்**

**இன்னொரு காரணமும் சொல்லப்படுவதுண்டு. நிலவுடைமைச் சமூகத்தில் ஏற்கனவே வழக்கத்தில் இருந்த மேல் துண்டு, பாதக்குறடு, குடை என்பன பொதுவாக சாதிய அடுக்கில்மேலே இருந்த சமூகங்களாலேயே கையாளப்பட்டன. கோவிலில் இறைவனே பெரியவன் என்பதால், அவன்முன் அவர்களும் அதைத் தவிர்த்தார்கள். குறித்த வர்க்கத்தினர் மட்டுமே பயன்படுத்திய அந்தப் பொருட்கள், காலனித்துவ ஆட்சியின் பின், எல்லா சமூகத்தினரும் பேதமின்றிப் பயன்படுத்துகின்ற - மேற்சட்டை, செருப்பு, தொப்பி என்று முறையேமாறிவிட்டன. ஆனால் அந்தஸ்தின் அடையாளமாக இல்லாமல் போன பின்பும், அவை ஆலயங்களில் அனுமதிக்கப்படவில்லை.**

**ஆக இது வெறும் சமூக மரபுதான். இதற்கு சமயரீதியில் எவ்வித முக்கியத்துவமும் இல்லை. சைவநூல்களான திருமுறைகள், வேதாகமங்கள், புராணாதிகாசங்கள் எதிலுமே இவற்றை அகற்றுவது கட்டாயம் என்ற ஆணைகள் எங்கும் வழங்கப்படாததன் பின்னணி இதுதான். அவை அந்நியர் ஆட்சியின் பின்பேயே நம்மிடம் பரவலான வழக்கத்துக்கு வந்தவை.**

தொடர்ச்சி... (பக்கம் -15)

# பெண்களின் இயல்பு வாழ்வை உறுதிப்படுத்துவதற்கான கோரிக்கை

கடந்த ஈஸ்டர் ஞாயிறன்று இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள தேவாலயங்கள் மற்றும் உல்லாசவிடுதிகள் உட்பட ஒன்பது இடங்களில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களால் 290இற்கு அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர். இத் தாக்குதல்கள் நாட்டின் சகல மக்களையும் ஆழ்ந்த கவலைக்குள்ளாக்கியுள்ளதுடன் மக்கள் மத்தியில் அச்சத்தையும் நம்பிக்கையின்மையையும் உருவாக்கியுள்ளன.

சமதை பெண்ணிலைவாத குழுவினரான நாம் உயிரிழந்த அனைவருக்குக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எமது ஆதரவையும் அன்பையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்தவெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து நாட்டில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவும் அரசினால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுள் பல நடவடிக்கைகள் மக்களின் பாதுகாப்புக்காகவும், அச்சத்தைப் போக்குவதற்காகவும் எடுக்கப்பட்டிருப்பினும் ஒரு சில நடவடிக்கைகள் மக்களில் ஒரு பகுதியினரை அதிலும் பெண்களை எதிர்மறையாகப் பாதித்துள்ளதையிட்டு நாம் மிகவும் மனம் வருந்துகின்றோம்.

குறிப்பாக பாதுகாப்புக் காரணங்களுக்காக முகத்தை யாரும் மறைக்க கூடாது என்ற தடையைப் பயன்படுத்தி புர்கா மற்றும் நிகாப் அணியும் முஸ்லிம் பெண்கள் மீது காட்டப்படும் பாரபட்சங்களும், முன்வைக்கப்படும் அழுத்தங்களும், அவர்கள் பொதுவெளிகளிலும் வேலையிடங்களிலும் எதிர்கொள்ளும் சவால்களும், எதிர்ப்புக்களும் எமக்கு மிகுந்த கவலையை உண்டு பண்ணியுள்ளன.

இலங்கை பன்மைத்துவ அடையாளங்களைக் கொண்டவர்கள் வசிக்கும் நாடு ஆகும். புடவையை இந்திய முறையிலோ கண்டிய முறையிலோ உடுத்தல், புர்கா அணிதல், சட்டை அணிதல், தாலி கட்டுதல், காப்பு அணிதல், மெட்டி அணிதல், பூ வைத்தல், பொட்டு வைத்தல், தலை முடி வளர்த்தல், என பல பெண்கள் இவற்றைத் தமது சுயதெரிவாகவும், பலர் கட்டாயத்தின் பேரிலும் செய்து வருகின்றனர். விரும்பிய மதத்தைப் பின்பற்றுவது அல்லது பின்பற்றாமல் இருப்பதும் போன்றே ஆடைத்தெரிவும் ஒரு மனிதரின் தனிப்பட்ட விருப்பம் சார்ந்தது. இது தனிமனித உரிமையாகும்.

எமக்கிருக்கும் தெரிவுகளுக்கான வரையறையை இன-மத மானம், மரியாதை, கௌரவம் என்ற காரணங்களுக்காகவோ தேசிய பாதுகாப்பு என்ற காரணத்துக்காகவோ குடும்பங்களும், சமூகமும், மத நிறுவனங்களும் நிர்ணயிப்பதை நாம் விரும்பவில்லை.

பாதுகாப்பு சார்ந்த விடயங்களில் பெண்களுக்கும், பெண்களின் ஆடைகளுக்கும் இருக்கும் தொடர்பை விட உண்மையான, ஆழமான வேறு காரணிகள், ஒருவருக்கொருவர் துவேசத்தை விதைத்தலும் பரப்புதலும், வளங்களுக்கான போட்டி, லஞ்சம் ஊழல் போன்ற பல்வேறு காரணிகள் இருப்பதை சமூகங்களும் அரசும் புரிந்து கொண்டு அவற்றை முதன்மையாகச் சீர் செய்ய வேண்டும்.

பெண்கள் உரிமையையும் வன்முறைகளற்ற வாழ்வையும் விரும்பும் பெண்நிலைவாதிகளான நாம்,

• பாதுகாப்புக் காரணங்களுக்காக முகத்தை மூடக்கூடாது என்ற அரசின் தடையைக் காரணங்காட்டி முஸ்லிம் சகோதரிகளுக்கு ஏற்படுத்தப்பட்டு வரும் இடைஞ்சல்களுக்காக மனம் வருந்துகின்றோம்.

• இந்த நாட்டில் வாழும் அனைத்துப் பெண்களும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் இதே விதமான தடைகளால் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றோம், அச்சுறுத்தபடுவோம் என்பதை உணர்ந்துள்ளோம்.

அந்தவகையில் வன்முறையற்ற வாழ்வை விரும்பும் நாம் எங்கள் சமூகங்களிடமும், அரசிடமும் பின்வரும் கோரிக்கைகளை முன் வைக்கின்றோம்.

1. எமது பண்பாட்டிலோ எமது விருப்பத்தெரிவுகளிலோ யாரும் தலையிடக்கூடாது என நாம் விரும்புவது போல, பிறருக்கும் விருப்பம், தெரிவு உண்டு என்பதை நாம் மதிக்க வேண்டும்.

2. தனிப்பட்ட அல்லது குழு வெறுப்பு விருப்புக்களை இந்த சந்தர்ப்பத்தைப் பாவித்து பாதுகாப்பு என்ற பெயரில் இன்னொருவரிலோ, குழுவிலோ காட்ட வேண்டாம்.



3. மற்றவர்களது பண்பாட்டை விமர்சித்தல், அவர்களின் தெரிவுகளுக்கு தடைவிதித்தல் போன்ற செயல்களால் சமூகங்களுக்கிடையிலான சகிப்புத்தன்மையை இல்லாமல் செய்வதையும் முரண்பாடுகளை உருவாக்குவதையும் நிறுத்தவும்.

4. மனிதர்களான நாம் அன்பு, புரிந்துணர்வுடன் அனைவரும் ஒற்றுமையாக வன்முறையற்ற வாழ்வை வாழக்கூடிய இலங்கையை உருவாக்குவதில் நாட்டிலுள்ள சகல மக்களின் முழுமையான ஒத்துழைப்புடன் செயற்படுமாறும்,

- இத்தகைய பாரபட்சங்களை முடிவிற்கு கொண்டுவர தேவையான செயற்பாடுகளைத் துரிதப்படுத்துமாறு அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.

- தீவிரவாத வன்முறை மனப்பாங்குகளைத் தோற்றுவிக்கும் உண்மையான மூலகாரணிகளைக் கண்டறிந்து சுய-அரசியல் லாபங்களற்ற நிலையான தீர்வுகளை நோக்கி நாட்டை வழிநடத்துமாறு அரசையும் அரசியல்வாதிகளையும் கேட்டுக் கொள்கின்றோம்.

நாம் அன்பு, நம்பிக்கை, அடிப்படையிலான அகிம்சையான வன்முறையற்ற உறவுகளை உருவாக்கிக் கொள்ளவும், பேணவும் வாழவும், எமது சந்ததிகளுக்காக விட்டுப் போகவும் விரும்புகின்றோம்.

சமதை பெண்ணிலைவாதக் குழு, மட்டக்களப்பு

# அனர்த்தகால உளவியல் முதலுதவி - பகுதி 05

Dr. யூடி ரமேஸ் ஜெயகுமார்
உளநல மருத்துவர்.
வாழைச்சேனை வைத்தியசாலை

## அனர்த்தகால நெருக்கீட்டு முகாமைத்துவம்

### பயனுடைய பொழுதுபோக்குகள்:-

பயங்கரவாத தாக்குதல்களின் நேரடி மறைமுக பாதிப்புகள் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரையில் நாளாளந்த செயற்பாடுகள், குடும்ப கடமைகள், தொழில் முயற்சிகள், ஆன்மிகச் செயற்பாடுகள், சமூகச் செயற்பாடுகள், பாடசாலைச் செயற்பாடுகள் என ஒரு நாளின் பல செயற்பாடுகளைப் பாதித்துள்ளன. இவற்றை எதிர்கொண்டு மீள் எழுவதற்கு உடலுக்கும், மனதிற்கும் பொருத்தமான பொழுதுபோக்குகள், உடல், உள இயக்கச் செயற்பாடுகள் மிக அவசியமானவை. குறைந்தது இரண்டு மணி நேரங்களையாவது காலை, மாலை ஆகிய நேரங்களில் பயனுடைய பொழுதுபோக்குகளுக்கு, விளையாட்டுகளுக்கு ஒதுக்குவது நன்று. அத்துடன் வார இறுதி, பாடசாலை விடுகை, வருட இறுதியில் திட்டமிட்ட பொழுதுபோக்கு, சுற்றுலா போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுங்கள். உங்கள் பாதுகாப்பு, பயணங்கள் என்பவற்றில் அவதானமாக இருங்கள். மாலையில் குறைந்தது ஒரு மணி நேரமாவது குழு விளையாட்டுகளில் ஈடுபடுவது மிகப் பொருத்தமானது.



கல்லூரி, பாடசாலைகளில் உள்ள உதைபந்து, கிரிக்கெட், வலைப்பந்து, கூடைப்பந்து, கபடி அணிகளில் இணைந்து விளையாடுவது மிகப் பயனுடையது. பாதுகாப்பு காரணங்களால் தற்காலிகமாகத் தவிர்க்கலாம். விளையாட்டுச் செயற்பாடுகளால் உடலில் சுரக்கப்படுகின்ற 'என்ரோபின்' எனும் ஓமோன் மனிதனை எப்போதும் சுறுசுறுப்பாக, உற்சாகமாக, கலகலப்புடன், புத்திக் கூர்மையுடன் வைத்திருப்பதை விளையாட்டு வீரர்களில் கண்டுபிடிக்கப்பட்டதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. அத்துடன் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து மீளெழும் ஆற்றலும் அதிகரிக்கும். காலையில் அரைமணி நேரமாவது யோகாசனத்தில் உடல் வலிதாக்கலுடன் தொடர்புள்ள ஆசனங்களையும் மனவலிதாக்கங்கலுடன் தொடர்புள்ள தியானம், மூச்சுப்பயிற்சி, மந்திர உச்சாடனம், தசைத்தளர்வு பயிற்சி என்பவற்றை செய்வது பொருத்துமானது. அத்துடன் வீட்டுத் தோட்டம், பூங்கன்று பராமரிப்பு, செல்லப்பிராணிகளை வளர்ப்பது, மீன் வளர்ப்பு, பொருத்தமான படங்களைப் பார்ப்பது, கதைப்புத்தகம் வாசிப்பு, இணையத்தில் பயனுடைய விடயங்களைப் பெற்றுக்கொள்வது போன்ற விடயங்களைச் செய்யலாம்.

### ஆன்மிகச் செயற்பாடுகள்

குழுப் பிரார்த்தனைகள், பஜனை, செபமாலை சொல்லுவது, குர்-ஆன் ஓதுவது போன்ற அவரவர் ஆன்மிகக் கடமைகளை குடும்பமாகப் பிள்ளைகளுடன் வீடுகளில் செய்வது மிகவும் பயனுள்ளது. பல்சமய கூட்டுப் பிரார்த்தனை இன்றைய காலத்திற்கு மிகவும் அவசியமானது.

### படுக்கையறை உடற்பயிற்சிகள்:

யோகாசனம், 'ஸ்ரெச்சிங் (தசைகட்டுமான), தோப்புக்கரணம், துள்ளுதல், 'புசப்', கயிறு அடித்தல் என்பவற்றிற்கு மிகக் குறுகிய இடமே போதுமானது. வீட்டை விட்டு வெளியில் போக முடியாத தற்போதய நிலையில் வீட்டிலேயே இவற்றை செய்வதை வழக்கமாகக் கொள்ளவேண்டும். அவ்வப்போது உடல், உளச் சோர்வு ஏற்படும் போது, அதிகம் 'டென்சன்' ஏற்படும் போது இவற்றை செய்வது, இழந்த சக்தியைப் புதுப்பிப்பதாக அமையும், அனர்த்தகால நெருக்கீட்டு விளைவுகளை கையாள்வதற்கான தனிநபர் - குழுச் செயற்பாடாகவும் இது அமையும்.

### யோகாசனம்

பன்னிரண்டு படிநிலைகளைக் கொண்ட 'சூரிய நமஸ்காரத்தில்' நிற்றல், குப்புறப்படுத்தல், வளைதல், நீட்டுதல் உட்பட பயனுடைய பல பயிற்சிகள் உண்டு. காலை, மாலை ஒரு தடவையில் மூன்று முறையாவது செய்வது பொருத்தமானது.

தொடர்ச்சி... (பக்கம் -15)

# உயிர்த்த ஞாயிறில் உயிரிழந்தவர்களுக்கு லண்டனில் அஞ்சலி












இலங்கையில் உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல்களில் உயிர் நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஒன்று அண்மையில் லண்டன் ஹரோ புனித அன்ரூஸ் தேவாலயத்தில் நடைபெற்றது.

பட்ஸ் என்று அழைக்கப்படும் மட்டக்களப்பு நலிந்தோர் அபிவிருத்திச் சங்கம் இதற்கான ஏற்பாடுகளை கிழக்கிலங்கையின் ஏனைய அமைப்புக்களுடன் சேர்ந்து செய்திருந்தது. பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர், மாநகர கவுன்ஸில் உறுப்பினர்கள் உட்பட பல மத, இன மக்களும், தலைவர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இலங்கை குண்டுத்தாக்குதல்களில் உயிர் இழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

பட்ஸ் அமைப்பின் தலைவர் உமாச்சந்திரன் தலைமையிலான பல கிழக்கிலங்கை பள்ளிக்கூட பழைய மாணவர் அமைப்புக்கள் மற்றும் ஏனைய நலன்சார் அமைப்புக்களின் உறுப்பினர்கள் நிகழ்ச்சியை முன்னின்று நடத்தினர்.

# நாடாளுமன்றத்துக்கு முன்பாக எடுத்த சர்ச்சைக்குரிய புகைப்படங்கள்



இந்திய நாடாளுமன்றத்துக்கு வெளியே இரு நாடாளுமன்ற பெண் உறுப்பினர்கள் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் அங்கு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அந்தப் புகைப்படங்களுக்காக கேலிக்குள்ளான அந்த நாட்டின் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிமி சக்ரவர்த்தியும், நுஸ்ரத் ஜஹானும் தற்போது அதற்கு பதிலளித்துள்ளனர்.

நாடாளுமன்றத்திற்கு வெளியே புகைப்படங்களை முதல் முறையாக எடுத்துக்கொண்டபோது, இவர்கள் ஜீன்ஸ் மற்றும் டி-சர்ட் அணிந்திருந்ததால், இணையத்தில் கேலிக்கு உள்ளானார்கள்.



பிபிசிக்கு அளித்த பிரத்யேக பேட்டியில், ""நாங்கள் இளம் பெண்கள், ஏன் ஜீன்ஸ், டி-சர்ட் அணியக்கூடாது" என்று மிமி கேட்டார்.

"இவர்கள் எங்கள் ஆடைகள் பற்றி அதிகம் கவலைப்படுகிறார்கள். ஆனால், குற்றப் பின்னணி கொண்டு, ஊழல் மிகுந்து, கறை படிந்திருந்தாலும், புனிதமாக ஆடைகளை அணிந்து வரும் நாடாளுமன்ற உறுப்பினர்களை பற்றி ஏன் கவலைப்படுவதில்லை?" என்று அவர் கேள்வி எழுப்புகிறார்.

மிமியும், நுஸ்ரத்தும் நாடாளுமன்றத்திற்கு முன்னால் இவ்வாறு உடை அணிந்து புகைப்படம் எடுத்துக்கொண்டதற்கு பலரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

"இது நாடாளுமன்றமா அல்லது பேஷன் அணிவகுப்பு நடக்கும் இடமா?" என்று ட்விட்டர் பதிவு ஒன்று தெரிவிக்கிறது.

நுஸ்ராத் ஜிஹானுக்கு 29 வயது. மிமி சக்ரவர்த்திக்கு வயது 30.



"நான் இளைஞர்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறேன். அவர்கள் அணிவதையே நான் அணிவதை பார்கிற இளைஞர்கள் பெருமிதமடைவார்கள்" என்கிறார் மிமி சக்ரவர்த்தி.

தனது திரைப்பட வாழ்க்கையால் அரசியலில் நுழைந்ததாக தெரிவித்துள்ள மிமி, இளைஞர்களால்தான் மாற்றத்தை கொண்டுவர முடியும் என்று உறுதியாக நம்புகிறார்.

--- நன்றி பிபிசி

அரங்கம்
செய்திகள்

அரங்கம் பத்திரிகையில்
விளம்பரம் செய்ய
சிறப்புத் தள்ளுபடி!

கால்பக்கம் - ரூபா 2500
அரைப்பக்கம் - ரூபா 5000
முழுப்பக்கம் - ரூபா 10,000
சிறுவிளம்பரங்கள் - ரூபா 200
மாத்திரமே

விளம்பரங்களுக்கு
தொடர்பு : 071 399 909 1
arangamnews@gmail.com

NELSON COLLEGE LONDON

NCL
NELSON COLLEGE LONDON

# Now Enrolling

Are you 18+
CALL US

Business Course:
0208 514 0033
Hospitality Management
0203 500 0239



## Why Us

We provide:

- One to One support
- Flexible Timetable
- National and international course-based events & tours
- Employer introduction
- Job placement

## Courses

- HND Business
- HND Hospitality Management

- BA (Hons) Top Up in Business
- BA (Hons) Top Up in Hospitality Management

FIND OUT MORE
www.nelsoncollege.ac.uk

EMAIL US
info@nelsoncollege.ac.uk

IN PARTNERSHIP WITH

LONDON METROPOLITAN UNIVERSITY

Pearson

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## வாடி வதங்கிய முகங்களும், நெற்பயிர்களும்

'வேளாண்மைச் செய்கையை இந்த வருடம் கைவிடும் நிலைமைதான் ஏற்படும் போலிருக்கு' என கனகசபை பன்சேனை சந்தியில் நின்று வேலுப்பிள்ளையிடம் கூறினான்.

சிறுபோக நெற்செய்கைக்காக நெல்விதைக்கப்பட்டு பயிரும் வளர்ந்து வரும் நிலையில் தண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகும் போலவிருக்கின்றது. இப்படிப்போனா செய்த வேளாண்மையையும் கைவிட்டுத்து போறாதுதான் என கனகசபை கூறினான்.

குளத்தில நீரை சேமித்து வைச்சாலும், சிறுபோகம் செய்யிற காலத்திற்குள் மழை பெய்யலண்டா குளத்தில இருக்கிற நீர் காணாது. எப்படித்தான் குளத்தில இருக்கிற நீரை பாய்ச்சினாலும் மாதத்திற்கு ஒரு மழையாச்சும் பெய்யாட்டி வேளாண்மைகளும் செழிப்பில்லை. நம்மட படுவான்கரையில ஒழுங்கா மழைபெய்து பல நாட்களாகிட்டு. இதனால பலவயல்கள் வறண்டுபோய் கிடக்குது. சில வயல்களில் புல்லுமட்டும்தான் நிற்குகின்றது. படுவான்கரை மக்களின்ட வாழ்வாதாரமே நெல் உற்பத்திதான். என்ன கஸ்டப் பட்டெண்டாலும், ஈடுவைத்தெண்டாலும்,



கடன்பட்டெண்டாலும் வேளாண்மை செய்கையை கைவிடுறல்லை.

நட்டமோ, இலாபமோ ஒவ்வொரு வருசமும் செய்த கால்கைகள் சும்மா இருக்காது செய்யத்தான் தொடங்கும். அதேபோலதான் இந்த வருடமும் வேளாண்மையைச் செய்கையில் படுவான்கரை மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, வேளாண்மைக்கு அடிக்கடி நீர் பாய்ச்ச வேண்டும். அந்நீர் குளத்தில் இருந்தே பாய்ச்சப்படுகின்றது. நீண்ட நாட்களாக படுவான்கரைப்பகுதியில் நினைத்தளவிலான மழை பெய்யாததினால் குளத்தின் நீர்மட்டமும் குறைந்துபோய் உள்ளது. இதனால் இருக்கின்ற நீர் வேளாண்மைக்கு பாய்ச்சுவதற்கு போதுமானதாகவில்லை.

சித்திரை மாதத்தில் வழமையாக மழைபெய்யும் ஆனால் இந்தவருடம் மழை மிகமிக குறைவே. வைகாசி மாதம்பிறந்தால் கண்ணகி அம்மன் கோயில் ஆரம்பித்துவிடும். கண்ணகி அம்மன் குளிர்த்தி அன்றும் மழைபெய்யும் இந்தவருடம் அதையும் காணவில்லை. இதனால் விவசாயிகள் மிகுந்த கவலையில் ஆழ்ந்திருப்பதுடன், நீரைப்பாய்ச்சுவதில் இரவு, பகலாக பல பிரயத்தனங்களை செய்து கொண்டிருக் கின்றனர். சில வயல்களுக்கு ஆறுகளை கட்டி, நீர் பாய்ச்ச வேண்டும். சில வயல்களுக்கு இன்னொருவரின் வயல் ஊடாக நீர் பாய்ச்ச வேண்டும். அவ்வாறிருக்கையில் தற்போதைய நீர் பஞ்சம் காரணமாக, முன்னுக்குள்ளவர் ஆற்றினை கட்டி நீர் பாய்ச்சுவதற்கு ஆரம்பித்தால் பின்னுக்குள்ளவர் அவர் இல்லாத நேரத்தில் அதனை வெட்டி தான் பாய்ச்சுக்கொள்வது போன்ற செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. நீர் பஞ்சம் காரணமாகவே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன

இதனால் விவசாயிகளிடம் முரண்பாடுகளும் ஏற்படுகின்றன. நீர் ஏத்துக்களை முன்னுள்ளவர்கள் நீர் இறைப்பதற்காக பயன்படுத்தினர். அவ்வாறான நீர் ஏத்துக்களின் பயன்பாடு இல்லாமல் சென்றதினால், நீர்ப்பம்பிகளை கொண்டு நீர் உள்ள இடத்திலிருந்து வயலுக்குள் இறைக்கின்ற செயற்பாடுகள் தற்காலத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாருடைய நெல்வயலை, யார் காப்பாற்றிக்கொள்வதென்ற அச்சமும் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ளது. மழைபெய்யாததன் வெளிப்பாட்டினாலையே இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

உரிய காலத்திற்கு மழை கிடைக்காவிட்டால், பயிர்செய்கையில் பலனை காணமுடியாது. வேளாண்மை செய்கை என்பது, இலாபத்திற்கான தொழில் என்பதனைவிட வீட்டில் உணவு சமைப்பதற்கு அரிசி இருக்கும் என்ற எண்ணத்திலேதான் படுவான்கரை மக்கள் வேளாண்மைச் செய்கையில் ஈடுபடுகின்றனர்.

வீட்டில் நெல் இருந்தால் அதை சீதேவி என்கின்றனர். இதற்காகத்தான் எத்தனை வறட்சிகள், வெள்ளங்கள் வந்து வயல்கள் அழிந்து ஒருமூடை நெல்லுடன் வீடு திரும்பினாலும் வேளாண்மைச் செய்கையை கைவிடாமல் செய்து

**படுவான் பாலகன்**

கொண்டிருக்கின்றனர். தற்போதைய மழை இல்லாத நிலையில் இரவு, பகலாக விவசாயிகள் வயல்களிலே நீருக்கு அருகில் அதனைப்பெற்று வயலுக்குள் பாய்ச்சுவதற்காக போராடிக் கொண்டிருக்கின்றனர். தாம் அருந்துவதற்கு நீர் இல்லாவிட்டாலும் பயிருக்கு நீரை செலுத்துவதிலையே அதிக கவனம் செலுத்துகின்றனர். இதனால் தான் உழவுத்தொழில் செய்பவர்களை பிறர் வாழ தம்மை அர்ப்பணிப்பவர்கள் எனச் சொல்வார்கள். இவ்வாறு விவசாயிகளைப் பற்றி சொல்லிக்கொண்டே போகலாம் எனக்கூறிய வேலுப்பிள்ளை.

மழை இல்லாத காலங்கள் வந்தால் தாந்தாமலை முருகன் ஆலயத்தில் பொங்கல் வைத்தால் மழைபெய்துவிடும். அதனைத்தான் செய்ய வேண்டும் எனக்கூறிக்கொண்டு கந்தசாமியும் தாந்தாமலை நோக்கி புறப்பட்டான்.

## நினைவழியா வடுக்கள்

அண்மையில் வாசித்த நூல் பற்றிய பகிர்வு.




'நினைவழியா வடுக்கள்' எனும் சிவா சின்னப்பொடி அவர்களின் நூல் விடியல் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. யாழ் மேட்டுக்குடியினரால் தனக்கேற்பட்ட சாதி ஒடுக்குமுறைகளையும் அநியாயங்களையும் எந்தவிதமான கற்பனைகளும் இன்றி அனுபவத்தினூடு உண்மையின் தரிசனமாய் தோலுரித்துத் தருகின்றது.

தன்னின மக்களின் அடிப்படை உரிமைகளையே மறுத்த யாழ் மேட்டுக்குடி, தனக்கான தேசியத்தினை தமிழ்த் தேசியமாக கட்டமைத்து ஒட்டுமொத்த தமிழர்களையும் அதற்கு ஆகுதியாக்கி சுகம் அனுபவித்திருக்கிறது என்பதை நூலினூடாக விளங்கிக் கொள்கின்றபோது இற்றைவரை தமிழ்த் தலைவர்களாக கொண்டாடப்பட்டவர்க்கெல்லாம் காறி உமிழ வேண்டும் என்கின்ற ஆத்மார்த்த கோபம் உருவாவதைத் தவிர்க்க முடியவில்லை. அது போல் உண்மையாக மக்களுக்காக உழைத்த தமிழ் தலைவரான பொன்.கந்தையாவை தெரியாமல் இருந்திருக்கிறோமே எனும் குற்ற உணர்வும் ஏற்படுகிறது.

தங்களைத் தவிர்த்து மற்றவர்கள் கல்விகற்பதையோ மேலான பதவிகளுக்கு வருவதையோ இந்த யாழ் மேல்வர்க்கம் இன்றும் கூட விரும்புவதில்லை என்பதையும் எடுத்துக்காட்டுகின்றார். இதற்காக அவர்கள் செய்யும் தில்லுமுள்ளுகளை எதிர்கொண்டு நிற்பவர்களால்த்தான் இதனைப் புரிந்து கொள்ளமுடியும்.

**சிவரட்ணம்**

தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதார ரீதியாகவும் சமூகரீதியாகவும் முன்னேற்றம் அடையாது தடுப்பதற்காக மேட்டுக்குடியினர் எவ்வாறு எமது பாரம்பரிய அரங்கக் கலைகப் பயன்படுத்தினர் என்பதை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றபோதுதான் அதனுடைய இன்றைய வடிவம் மட்டக்களப்பில் எவ்வாறு செயற்படுகிறது என்ற புரிதல் உண்டாகிறது. (அது பற்றி தனிக் கட்டுரை எழுத இருக்கின்றேன்.)

ஆக மொத்தத்தில் இந்நூல் தமிழ் தேசியம், யாழ் மேல்வர்க்க அரசியல், உண்மையான மக்கள் விடுதலை போன்றவை பற்றிச் சிந்திப்பவர்களுக்கு பயனுடையதாக அமைகின்றது.

தொடர்ச்சி...

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்...

ஆகவே இதனடிப்படையில் குற்றவாளிகள் யாரெனத் தெரிந்து விட்டதாகவும் அவர்களைக் காப்பாற்றுவதற்காகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டதாகவும் அத்துரலியே ரத்ன தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணை நடத்தும்போது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான குற்றவாளிகளை கைது செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கதல் செய்ய முடியாது.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றும் மைத்திரிபால சிறிசேனவினால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்ய முடியாதென கொழும்பில் உள்ள இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கமும் கூறியுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு சிசர மென்டிஸ் வழங்கிய வாக்குமூலங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார். பாதுகாப்புச் சபையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான புலனாய்வு அறிக்கை குறித்து பேசப்படவில்லையெனவும் மைத்திரிபால சிறிசேனவின் ஊடகப் பிரிவு வியாழக்கிழமை மாலை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் பலருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்ட பலர் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். ஆனால், நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பட்டதால் அந்த வழக்குகளை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்யுமெனவும் கூறப்படுகின்றது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டமை தொடர்பாக இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் அதிருப்தியும் வெளியிட்டுள்ளது.

# இப்படியும் ஒரு காலம் நிலவியது

## அமிர்தகளி வினாசிப்பரிசாரியாரும் காத்தான்குடி ஈசிப்பாசியாரும்

*(எல்லா இனத்துப் பேரப் பிள்ளைகளுக்கும் ஒரு பாட்டன் சொல்லும் பழம் கதைகள்: கதை—3)*

1949 - 50 களில் வினாசித்தம்பிப் பரிசாரியார் மட்டக்களப்பு அமிர்தகளியில் மிகப் பிரசித்தமான சித்த வைத்தியராவர்.

இதேகாலகட்டத்தில் மட்டக்களப்பு தாண்டவன் வெளியில் காத்தன்குடியைச் சேர்ந்த யூசுப் காஜியார் கடையும் இருந்தது. இக்கடையில் மருந்துச் சாமான்களும் விற்பதுண்டு.

இஸ்லாமிய மக்களிடம் யுனானி வைத்தியமுறையில் பாண்டித்தியம் மிக்க வைத்தியர்கள் அன்று காத்தான்குடியில் இருந்தாலும் காத்தான்குடியின் அதிகமான இஸ்லாமிய மக்கள் தேடி வருவது இந்த வினாசித்தம்பிப் பரிசாரியாரைத்தான்.

அவரது வீடு மட்டிக்களியில் இருந்தது.

ஆனால் அவர் முகத்துவாரத்தில் பார் வீதியில் தனது வைத்திய நிலையத்தை வைத்திருந்தார்.

அப்போது சீலாமுனையில் சீனிபரிசாரியார், கந்தையா பரிசாரியார் போன்றோர் இருந்தனராயினும் வைத்திய நிலையம் ஒன்று நிறுவி குளிசைகளைக் குப்பிக்குள் போட்டு வைத்து தனக்கென ஒரு அறையில் அமர்ந்து இன்றைய ஒரு டிஸ்பென்சறி போல தனது சித்த வைத்தியத்தை மேற்கொண்டவர் இந்த வினாசிப் பரிசாரியார் என மக்களால் அழைக்கப்பட்ட வினாசித்தம்பிப் பரிசாரியார் ஆவர்.

வைத்திய நிலையம் என்றதும் நீங்கள் இன்றைய வைத்திய நிலையம் போல எண்ணிவிடக் கூடாது.

இரண்டு சிறிய அறைகள் கொண்ட ஒரு சிறுவீடு, அத்தோடு ஒரு வராந்தா, முன்னால் ஓலையால் வேயப்பட்டு வெள்ளை மணல் பரப்பப்பட்ட சிறு குடிசை போன்ற தோற்றம். நோயாளிகள் வந்து அமர அந்த வெள்ளை மணல் மீது வாங்குகள். அத்தோடு தென்னங் குத்திகள்.

முன்னால் தளதளவென்று தண்ணீர் நிரம்பி நிற்கும் மட்டக்களப்பு வாவி. அதனை ஆறு என அழைப்பர். ஆற்றிலிருந்து வரும் காற்றை அனுபவித்தபடி நோயாளிகள் வரிசையாக அந்த வாங்கிலும் குத்திகளிலும் அமர்ந்திருப்பர்.

சேலை உடுத்து முக்காடு போட்ட முஸ்லிம் பெண்கள் சேலை உடுத்து, ஆனால் முக்காடுபோடாத தமிழ்ப்பெண்கள் அவர்கள் கூட்டிக் கொண்டுவரும் பிள்ளைகளுக்கும் அவர்களோடு வரும் ஆண்களுக்கும் அங்குவரும் தமிழ்ப் பிளைகளுக்கும் தமிழ் ஆண்களுக்கும் பெரிய வித்தியாசம் தெரிவதில்லை.

சீனிப்பரிசாரியார் எமது உறவினர். எனக்கு ஏதும் வருத்தம் வந்தால் அம்மா முதலில் கை வைத்தியம் செய்வாள். அப்பா சில ஆலோசனைகள் சொல்வார்.

எனது தந்தையாரும் வைத்தியத் தொழில் நடத்தாத ஆனால் வைத்திய ஆலோசனைகள் கூறும் ஓர் கிராமவைத்தியர்.

தனது கை வைத்தியத்திற்கும் அப்பாவின் வைத்திய ஆலோசனைகளுக்கும் சரிவராவிட்டால் அம்மா என்னைக் கூட்டிகொண்டு இந்தச் சீனிபரிசாரியாரிடம் தான் செல்வாள்.

சீனிபரிசாரியாரின் வைத்தியம் சரிவராவிட்டால் அப்பாவின் ஆலோசனையுடன் அம்மா என்னை வினாசிபரிசாரியாரிடம்தான் அழைத்துச் செல்வார்.

அங்குதான் நான் முக்காட்டுடன் இருக்கும் அந்த முஸ்லிம் பெண்களைக் காண்பேன்.

மட்டக்களப்பு பட்டணத்தில் இறங்கி முகத்துவார பஸ் எடுத்து அமிர்தகளி 2ஆம் கட்டையடியில் இறங்கினால் வினாசிபரிசாரியாரின் வைத்திய நிலையத்தின் முன் இறங்கலாம்.

காத்தான்குடியிலிருந்து வரும் இஸ்லாமியருக்கு இது நல்ல வசதியான பிரயாணம். இன்று மட்டக்களப்பில் பல நவீன வைத்திய சாலைகள் வந்து விட்டன. ஜி.வி ஹொஸ்பிட்டல். பயனியர் ஹொஸ்பிட்டல் என இந்த இரண்டிலும் காத்தான்குடி இஸ்லாமியரை இன்று அதிகம் காணலாம்.

அன்று ஏறத்தாழ 70 வருடங்களுக்கு முன் இத்தேவையை நிறைவேற்றியது வினாசிப்பரிசாரியாரின் குடிசை வைத்திய நிலையம்தான்.

எனது அப்பாவுக்கும் வினாசி பரிசாரியாருக்கும் நல்ல உறவு இருந்தது. ஒருவர்மீது ஒருவர் மிகுந்த மதிப்புக்கொண்டிருந்தனர்.

வைத்தியம் மூலிகைகள் சம்பந்தமாக இருவரும் உரையாடுவர். சீனிபரிசாரியாரில் எனக்கு அவ்வளவு விருப்பமில்லை. அவரது விறுக்கான கதைகளே காரணம்.

சீனிப்பரிசாரியாரின் வைத்தியம் சரிவராமல் அம்மா என்னை வினாசிபரிசாரியாரின் வைத்திய நிலையத்திற்குத்தான் கூட்டிகொண்டு போனபோதுதான் முதன் முதல் நான் இந்த வினாசிப் பரிசாரியாரைக் கண்டேன்

முன்மொட்டை, பின்னால் மிகச் சிறியதோர் குடும்பி, காதிலே கடுக்கன், மெல்லிய கருமை நிறம், வெறுமேல் அதனைப் போர்த்தும் ஒரு சால்வை, இடுப்பில் கணுக்கால் தெரியத் தூக்கிக்கட்டிய ஒரு வேட்டி, எக்கத்தில் செருகிய ஒரு பெரிய பன்னோலைக் குட்டான், அதற்குள்தான் அவரது முக்கிய பொருட்கள் இருக்கும்.

கனிவான அணுகுமுறை, ஆறுதலாக மெல்ல மெல்ல ஆர்பாட்டமிலாது கதைத்தல்.

இப்போது 70 வருடங்களுக்குப் பின் நினைக்கையில் வினாசி பரிசாரியாரின் இத் தோற்றமே ஞாபகம் வருகிறது.

இவர் காத்தான்குடி இஸ்லாமியரை கவர்ந்ததில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

வினாசிப்பரிசாரியார் தன்னிடம் வந்த ஒவ்வொரு இஸ்லாமியக் குடும்பங்களையும் நன்கு அறிந்திருந்தார்.

அவர்களது குடும்ப பிரச்சினைகளைக் கூட அறிந்திருந்தார். நோயோடு அவர்கள் தமது கவலைகளையும் அவரிடத்தில் கூறி ஆறுதல் பெறுவர்.

இதனை எனக்குப் பின்னாளில் கூறியவர் அவரது நண்பரான எனது அப்பா.

மருந்து மாத்திரமல்ல அவரது ஆலோசனைகளும் அவர்களுக்கு மருந்தாயின.

வினாசிப்பரிசாரியார் அன்று காத்தான் குடி இஸ்லாமிய மக்களின் மனதில் பதிந்து விட்டிருந்த பேரு.

வினாசிபரிசாரியாரும் சீனித்தம்பிப் பரிசாரியாரும் கந்தையாப் பரிசாரியாரும் தமது மருந்துத் தயாரிப்புகளுக்கு மூல




வளம் பெறும் இடம் ஒன்றிருந்தது.

அதுவே நான் முன்னர் குறிப்பிட்ட மட்டக்களப்பு நகரில் தாண்டவன் வெளியில் அமைந்திருந்த ஈசுப்பாசியார் கடை.

ஈசிப்பசியார் என்ற பெயர் உங்களுக்கு வினோதமானதாகத் தோன்றலாம். யூசுப் ஹாஜியார் என்ற பெயர்தான் ஈசிப்பாசியார் என மட்டக்களப்புத் தமிழர் நாவில் வழங்கியது.

ஹாஜியார் என்ற பட்டம் மெக்கா சென்று வந்தவர்கள் என்பதற்கு ஓர் அடையாளம். இரண்டு தரம் சென்று வந்தவர்கள் அல்ஹாஜ் என அழைக்கப்பட்டனர்.

இவையாவும் எனக்குப் பின்னால் தெரிந்த விடயங்கள்.

அப்போது அல்காஜ் என யாரும் இருந்ததாக எனக்கு ஞாபகமில்லை.

அப்போது மெக்கா செல்வது என்பது ஒரு மிகமிகப்பெரும் செயல்.

ஊருக்கெல்லாம் சொல்லித்தான் புறப்படுவார்கள். மட்டக்களப்பு தமிழ் மக்கள் கதிர்காமம் போவதும் அப்படித்தான்,

யூசுப் எனப்பெயர் தாங்கிய இவர் 1950 களில் மெக்கா சென்று வந்தமையினால் யூசுப் ஹாஜியார் ஆனார். அதனைத் தமிழர் தம் வயப்படுத்தி ஈசிப்பாசியார் ஆக்கிக் கொண்டனர். அவரும் மனமுவந்து அப்பெயரை ஏற்றுக் கொண்டார். அவரது கடையில் எல்லாவித சாமன்களும் இருந்தன. சிப்பந்திகள் சுறு சுறுப்பாக எப்போதும் இயங்கிக் கொண்டிருப்பர். காஜியாரைப் பார்த்ததும் மனதில் ஓர் மதிப்புத் தோன்றும். உட்கார்ந்தபடி அனைவருக்கும் கட்டளையிட்டுக் கொண்டிருப்பார். சில வேளைகளில் தானே எழுந்து வந்து சாமான்கள் விநியோகிப்பார். வயது முதிர்ந்த தோற்றம் பருத்த உடல்வாகு. அசைந்து அசைந்துதான் நடப்பார். பிரபலமான இந்த ஈசிப்பாசியாரின் பலசரக்குக் கடையில் சகலவிதமான மருந்துச் சாமான்களும் இருந்தன.

சுக்கு, திப்பிலி, மிளகு, மஞ்சவண்ணா, அதிமதுரம், ஆடாதோடை, பெருங்காயம், தேன், வேர்க்கொம்பு, மஞ்சள், சிலவேர்கள், மூலிகைகள் என அவை எண்ணிலடங்கா.

வினாசித்தம்பிப் பரிசாரியாரும் சீனிபரிசாரியாரும் கந்தையாப் பரிசாரியாரும் தமது குளிசை தயாரிப்பிற்கான மூல மூலிகைகளைப் பெறும் இடம் இந்த ஈசிப்பசியார் கடைதான். அவர்கள் தாம் சென்று பெறுவதோடு நோயாளிகளையும் அங்கு அனுப்பி வைப்பர்.

வேர்க்கொம்பு எடுத்து மாவாக்கி அதனத் தேனில் குழைத்து கொடுங்கள் எனக் கூறிவிட்டு, அவற்றை ஈசிபாசியார் கடையில் பெற்றுக் கொள்ளலாம் என ஆற்றுப் படுத்தியும் விடுவார் வினாசிப் பரிசாரியார்.

வினாசிப்பரிசாரியார் வழிப்படுத்தலில்தான் நாம் இங்கு வந்தோம் என ஈசிப்பாசியாரிடம் மக்கள் கூறி அம்மருந்துப் பொருட்களைப் பெறுவர். அவரும் அப்படியா எனச் சிரித்தபடி அவற்றைத் தருவார்.

இன்று சில மெடிகல் பிரதிநிதிகள் டாக்டர்மாரிடம் வந்து உறவு கொள்வதும் அவர்களின் மருந்துகளுக்குச் சில டொக்டர்மார் எம்மை ஆற்றுப்படுத்துவதையும் காண்கிறோம்.

இதன் பின்னால் ஓர் வியாபாரம் உண்டு என ஐயமுறுவர் சிலர். இதேபோல அன்று நடைபெற்றதாயினும் அங்கு வியாபாரம் நடைபெறச் சந்தர்ப்பம் இருக்கவில்லை.

அது ஓர் அறம். ஓர் புரிந்துணர்வு. பரஸ்பர மரியாதையே அங்கு நிலவியது.

ஈசிப்பாசியார் கடை மூலிகைகள் வினாசித்தம்பிப் பரிசாரியார் கை பட்டு குளிசைகளாக மறறும் மருந்துகளாக மாறி தமிழ் மக்கள் நோய்களையும் இஸ்லாமிய மக்கள் நோய்களையும் ஒருங்கே தீர்த்தன என்பதே இங்கு நாம் கவனிக்க வேண்டியது.

இருவர் இணைப்பிலும் பயனடைந்தோர் சாதாரண மக்களே.

ஈசிப்பசியாரை இஸ்லாமியராக தமிழ் மக்கள் நோக்கவில்லை.

தமது நோய் தீர்க்க மருந்து மூலப்பொருள் தரும் ஒருவராகவே கன்டனர்.

வினாசிப்பரிசாரியாரை தமிழராக இஸ்லாமிய மக்கள் நோக்கவில்லை. தமது நோய்களைத் தீர்க்கும் மருந்து தரும் ஒருவராகவே கண்டனர்.

இஸ்லாமியர், தமிழர் என்ற பெரும் திரைகள் அங்கு இருக்கவேயில்லை.

திரையின்மையும் புரிந்துணர்வும் மனிதாபிமானமும் அறமும் அக்கால வாழ்வின் செழுமையான அம்சங்கள்.


இவற்றை நாம் எம் பேரப் பிள்ளைகளுக்கு உரக்கச் சொல்வோம்.

அண்மையில் வினாசிப்பரிசாரியாரின் படம் தேடி அவர் மகன் வீடு சென்றேன் தந்தையின் வைத்தியத் தொழிலை அவர் மகன் ஜெயராஜா தொடர்கிறார். அவருக்கு இப்போது வயது 78, வினாசித்தம்பி சித்த வைத்தியசாலை என்ற பெயரில் வைத்தியசாலை வைத்து நடத்துகிறார். தந்தையிடம் வந்தது போல தன்னிடமும் காத்தான்குடியிருந்து இப்போதும் நிறைய இஸ்லாமியர் வைத்தியம் செய்ய வருவதாகக் கூறினார்.

அவர் மருந்துச் சாமான் எடுப்பது மட்டக்களப்பிலுள்ள ஒரு இஸ்லாமியரின் மருந்துகடையில்தான்.

கடந்த சில வாரங்களாக வைத்திய உதவி நாடி வராதிருந்த இஸ்லாமியர் இப்போது பழையபடி வரத் தொடங்கியுள்ளதாக மகிழ்ச்சியுடன் கூறினார்.

தொடர்ச்சி... (பக்கம் -15)



# இமாலய சாதனை புரிந்த "தேனகச் செம்மல்" செ.இராஜதுரை

*அத்தியாயம்-05*

**காந்திஜீ சேவா சங்கம்**

1956ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இராஜதுரையின் தலைமையில் ஒன்று கூடிய இளைஞர்கள் "காந்திஜீ சேவா சங்கம்" என்ற பெயருடன் ஓர் சங்கத்தை உருவாக்கினார்கள். அச்சங்கத்துக்கு தலைவராக திரு.செ.இராஜதுரை அவர்களும் செயலாளராக திரு.இரா.கைலைநாதனும் தெரிவுசெய்யப்பட, சங்கம் பல முன்னேற்றகரமான செயல்களில் இறங்கியது. முதற்கட்டமாக மகாத்மா காந்தி அவர்களின் திருவுருவச்சிலையை மட்டக்களப்பின் மத்தியில் நிறுவுவதென பிரேரணை கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட அதற்குரிய செயற் திட்டங்களில் இராஜதுரையவர்கள் இறங்கி, பசார் வீதியில் காந்திஜீயின் திருவுருவச்சிலை வைக்கப்பட பெரிய விழாவாக அச்சிலை திறப்புவிழா நடைபெற்றது. அவ்விழாவில் காந்தியைப் பற்றிய உரைகள், காத்தான்குடியிலிருந்து வந்த களிகம்பு, சிலம்பாட்டம் எனவும் கவிதை, கும்மி, வசந்தம், கோலாட்டம், கரகம், கம்புக்கூத்தாடி என பலநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. காந்திஜீயின் சிகரம் நகர வாயிலில் கம்பீரமாக நிமிர்ந்து நின்றது.

1957ஆம் ஆண்டு மட்டக்களப்பில் ஏற்பட்ட கனமழை வீழ்ச்சியினாலும் அதனால் இடம்பெற்ற பெரிய வெள்ளத்தினாலும் காற்றின் வேகத்தினாலும் காந்தி சிலை களையிழந்து உருக்குலைந்து போயிற்று. திரும்பவும் இச்சிலை நிறுவப்பட வேண்டும் என்ற இராஜதுரையின் விடாப்பிடியான எண்ணத்தினாலும் முயற்சியினாலும் இரண்டாவது சிலை, தென் இந்தியாவில் சிற்பத்தொழிலால் பெரும் புகழுடைய திரு.ராவ்பகதூர் நாகப்பா அவர்களின் திருப்புதல்வன் திரு.எம்.என். மணிவண்ணன் என்பவரைக் கொண்டு காந்திக்கு புதிய சிற்பமொன்று உருவானது. இந்த மணிவண்ணனின் பாட்டனார் ஸ்ரீ. வாசநாயக்கர், பூட்டானார் பலபத்திரநாயக்கர் ஆகியோரும் மணிவண்ணனின் சகோதரர்களான திரு.ராஜாராம், திரு. ராமச்சந்திரன், திரு.ராமக்கிருஸ்ணன், திரு. ஜெயராமன் ஆகியோரும் தமிழ்நாட்டின் பிரபல சிற்பக்கலைஞர்களாவார்கள்.

ஐந்தாம் ஜோர்ச் மன்னர், விக்டோரியா மகாராணி, அன்றிபெசன் அம்மையார், சென் ஜோர்ஜ் ஆகியோர்களின் சிலைகளை செய்தவர்களும் இவர்களேயாவார்கள். புதிதாக உருவான இரண்டாவது சிலை திறப்புவிழாவுக்கு தலைமை தாங்கியவர் யாழ்ப்பாணம் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி கௌரவ செ.தனபாலசிங்கம் ஆவார். அவர் அன்று இராஜதுரையைப்பற்றி வழங்கிய வாழ்த்தோலையிது.

**'பசுமை நிறைந்த நிகழ்ச்சி'**

திரு.இராஜதுரையை இலங்கையில் தெரியாதோர் இல்லை. மட்டக்களப்புக்கு நகருக்கு நான் உத்தியோகமாற்றம் பெற்று வந்ததும் அவரை பார்க்க விரும்பினேன். அவர் துடிப்புள்ள இளைஞர். நல்லவற்றை நாட்டுக்கு செய்து கொண்டிருக்க வேண்டுமென்னும் ஆர்வம் மிகுந்தவர். மக்களுக்கு எதையாவது செய்து கொண்டிருக்க வேண்டுமென்று சதா கனவு கண்டு கொண்டிருப்பவர். இலங்கையில் இளைஞர்கள் -- மன்னிக்கவும் வயதுவந்தவர்களும் உறவாட நினைக்கும் பண்பாளர்.

மிகச் சிறிய வயதில் எவ்வளவு பெரும் புகழ் இவருக்கு! தமிழ் பேசும் மக்களுக்கு இவர் ஆற்றும் பணி பெரிது. மட்டக்களப்பு நாட்டுக்கு இவர் செய்யும் பணி மிகமிகப் பெரியது. இவர் தொண்டுகள் எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போன்றது மட்டக்களப்பு நகரில் காந்திஜீக்கு அமைத்துள்ள சிலையாகும். இச்சிலை அமைப்பதற்குரிய முழுப்பணத்தையும் இவரே கொடுத்தார் என்பதை அறியும் போதே இவரின் தகப்பனாக நான் பிறந்திருக்க கூடாதாவென்று நினைக்கிறேன். இச்சிலை திறப்பு விழாவுக்கு தலைமை வகிக்க கிடைத்தமை எனக்கு பெரும் பாக்கியமே. என்வாழ்வில் இந்நிகழ்ச்சி பசுமை நிறைந்ததாக நிலைத்திருக்கும்." என்று அவர் கூறியிருந்தார்.

**காந்தியின் 2ஆவது சிலை**

இச்சிலை நிறுவப்பட்டு அவ்விடம் "காந்தி சதுக்கம்" என அழைக்கப்பட்டது. காலவோட்டத்தில் காந்திஜீ சேவா சங்கம் 1976ம் ஆண்டு மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையில் நடாத்தப்பட்டு இச்சங்கத்தின் இரண்டாவது தலைவராக பி.ரி.அரசன் தெரிவு செய்யப்பட்டார். இச்சங்கத்துக்கு அன்றிருந்து இன்றுவரை பணியாற்றிய சில தலைவர்களையும் செயலாளரையும் படங்களுடன் தருகிறேன்.



ஸ்தாபகத்தலைவர் செ.இராஜதுரை

பி.ரி.அரசன்



வ.சிவசுப்பிரமணியம்



அ.செல்வேந்திரன்



திரு. கதிர். பாரதிதாசனாகும்.

1956ஆம் ஆண்டு இராஜதுரையால் உருவாக்கப்பட்ட காந்திஜீ சேவா சங்கமும் அவர் நிறுவிய காந்தி சிலையும் பரிணாம வளர்ச்சி அடைந்து, "காந்தி சதுக்கம்" புதிய சிலையோடு 2013இல் "காந்தி பூங்கா"வாக மாறி இப்போது புதுப்பொலிவோடு காட்சி தருகிறது.

02-10-2013இல் மகாத்மா காந்தியின் பிறந்த தினம் அன்று சிகரத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த திரு.இராஜதுரை அவர்களை காந்தி சேவாசங்கம் அழைத்து மூன்றாவது சிலையான தற்போதைய சிலைக்கு மாலை அணிவிக்கச் செய்தனர். அவ்விழாவில் பங்கு பற்றிய பிரமுகர்களை படங்களில் காண்க.

**கலாபூசணம் அரங்கம்**
**இரா.தவராஜா**



01.காந்தி சேவா சங்கத் தலைவர் அ.செல்வேந்திரன் 02.கட்டுரையாளர் இரா.தவராஜா 03."முடிசூடாமன்னன் "செ. இராஜதுரை 04.மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற பிரதிநிதி பொன். செல்வராஜா 05.பொ.மாணிக்கவாசகன் 06.மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற பிரதிநிதி சீ.யோகேஸ்வரன்.

(தொடரும்)

## மகாத்மா

**'மன்னுயில்'பெ.செல்வம்**
**சின்ன ஊறணி**

"மகாத்மா வான
மகாத்மாக்களே - இனி
இனி உயிர்த்த ஞாயிறு என்றதும்
உங்களையே நினைப்போம்
அழுவோம்"

## தானம்

**'மன்னுயில்'பெ.செல்வம்**
**சின்ன ஊறணி**

படிப்புக்குத் தேவை -அவதானம்
வாழ்க்கைக்குத் தேவை -நிதானம்
பசிக்குத் தேவை - அன்னதானம்
உயிர்வாழத் தேவை- இரத்த தானம்
எழுச்சி பெறத்தேவை சிரமதானம்

## கடும்முயற்சி எடுப்போமா?

பிட்டுக்கு இடையினிலே தேங்காய்ப்பூ வைப்பதுபோல்
பழங்காலம் தொட்டுமுதல் இற்றைவரை பேசுறாங்க
வீட்டுக்கு வீடுவந்து உடுபுடைவை மரக்கறிகள்
விளையாட்டுச் சாமான்கள் பன்னோலைப் பாய்களுடன்
கட்டாகச் சைக்களிலே காத்தான் குடியிருந்தும்
கால்நடை யாகஏ றாவூரின் நகரிருந்தும்
மட்டக் களப்பூரைக் கிராமத்தின் தெருக்களிலே
மலிவாக வியாபாரம் செய்தஇனம் மறந்திடுமோ?

மாதக் கணக்கினிலே கடன்கொப்பி நிலுவைசொல்லும்
மட்டூரின் கிராமத்தில் கடனாளி யாரென்று
பேதந்தான் பார்க்காமல் பலவீட்டுப் படியேறிப்
பலகாரம் தேத்தண்ணி வாய்நனைத்துப் பொழுதுபட
மீதங்கள் ஏதுமின்றி மறுநாளின் தேவையுடன்
மறுபடியும் பொருள்சுமந்து மறக்காமல் தேடிவரும்
மதம்வேறு என்றாலும் மானிடமே ஒன்றென்று
மகிழ்வோடு வாழ்ந்தஇனம் யார்கண்தான் பட்டதுவோ

பெருநாளில் பலகாரம் பொங்கலிலோ பாற்சாதம்
பகிர்ந்துண்ட காலமதில் பிரவினையா சொல்லுபாப்பம்
கருவோடு சேர்ந்துபிறக் காமலே விட்டாலும்
காத்திரமாய்ச் சோதரமாய்க் கனகாலம் வாழ்ந்தோமே
தெருவோடு போனஒன்றைத் தெரியாமல் கோவணத்துள்
தூக்கிவிட்டு இப்படியா உத்தரிப்புப் படவேணும்
அறிவோடு யோசித்து அடுத்ததலை முறைகூட
அன்பாகத் தான்வாழக் கடும்முயற்சி எடுப்போமா?

திரு. சிவலிங்கம்,
ஓய்வுநிலை தொழினுட்ப உத்தியோகத்தர்,
மட்டக்களப்பு.

# விளையாட்டு

## கிரிக்கட் உலகக் கிண்ண வரலாறு 03

யாசின் அரபாத்

### ஒன்பதாவது உலகக் கிண்ணம் 2007

ஒன்பதாவது உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகள் மேற்கிந்திய தீவுகளின் கரீபியன் மண்ணில் இடம்பெற்றன. இதுவரை இடம்பெற்ற தொடர்களிலும் பார்க்க அதிக அணிகளுடன் பாரிய தொடராக இவை நடந்தன. இத் தொடரில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து, இலங்கை, சிம்பாப்வே, தென்னாபிரிக்கா, பங்களாதேஸ், கென்யா, நெதர்லாந்து, அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, கனடா மற்றும் பெர்முயுடா ஆகிய 16 அணிகள் நான்கு குழுக்களாக பிரிக்கப்பட்டு விளையாடியிருந்தன.

குழுநிலை போட்டிகளின் முடிவில் ஒவ்வொரு குழுவிலிருந்தும் இரண்டு அணிகள் வீதம் எட்டு அணிகள் சுப்பர்-8 சுற்றுக்கு தகுதி பெற்று அதிலிருந்து இலங்கை, நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவானதுடன் இறுதிப் போட்டிக்கு இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் தெரிவாகின.

ஏப்ரல் 28 அன்று பார்படோஸ், கென்சிங்டன் ஓவல் மைதானத்தில நடைபெற்ற இறுதிப் போட்டி மழை காரணமாக 38 ஓவர்களாக நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய



அவுஸ்திரேலியா அணி 38 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களை பெற்றது. மீண்டும் மழை குறுக்கிட்டதன் காரணமாக இலங்கை அணிக்கு 36 ஓவர்களில் 269 என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. எனினும் இலங்கை அணி 36 ஓவர்கள் முடிவில் எட்டு விக்கட்டுக்களை இழந்து 215 ஓட்டங்களையே பெற்று தோல்வியை தழுவியது. இவ் வெற்றியின் மூலம் அவுஸ்திரேலியா அணி தொடர்ச்சியாக மூன்று முறை உலகக்கிண்ணத்தை வென்று ஹெட்ரிக் சாதனை படைத்தது. போட்டியின் நாயகனாக அடம் கில்கிறிஸ்ட் தெரிவானதோடு தொடர் நாயகனாக கிளென் மெக்ராத் தெரிவானார்.

இத்தொடரின் போது பலம்வாய்ந்த பாகிஸ்தான் அணி அயர்லாந்து அணியுடனான போட்டியில் அதிர்ச்சித் தோல்வியடைந்தது. இந்த தோல்வியின் பின்னர் பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் பொப் வூல்மர் மர்மமான முறையில் மரணமானார். விசாரணைகளின் பின் அது இயற்கை மரணமென பொலிசார் உறுதி செய்தனர்.

### பத்தாவது உலகக் கிண்ணம் 2011

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகள் இலங்கை, இந்தியா, பங்களாதேஸ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் பாதுகாப்பு பிரச்சனை காரணமாக பாகிஸ்தானில் நடைபெறவிருந்த போட்டிகள் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தன. இத் தொடரில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து, இலங்கை, சிம்பாப்வே, தென்னாபிரிக்கா, பங்களாதேஸ், நெதர்லாந்து, அயர்லாந்து, கனடா மற்றும் கென்யா ஆகிய 14 அணிகள்




இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு விளையாடியிருந்தன.

குழுநிலை போட்டிகள் மற்றும் காலிறுதிப் போட்டிகளின் முடிவில் இலங்கை, நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான், இந்தியா அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவானதுடன் இறுதிப் போட்டிக்கு இலங்கை மற்றும் இந்தியா அணிகள் தெரிவாகின.

ஏப்ரல் 02 அன்று மும்பை, வென்கடே மைதானத்தில நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் ஆறு விக்கட்டுக்களை இழந்து 274 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மகேந்திர சிங் தோணி தலைமையிலான இந்திய அணி 48.2 ஓவர்களில் நான்கு விக்கட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்து இரண்டாவது தடவையாக சம்பியனானது. போட்டியின் நாயகனாக தோணி தெரிவானதோடு தொடர்நாயகனாக யுவராஜ் சிங் தெரிவானார்.

### பதினோராவது உலகக் கிண்ணம் 2015

பதினோராவது உலகக் கிண்ண கிரிக்கட்



போட்டிகளை அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் இணைந்து நடாத்தின. இத் தொடரில் இங்கிலாந்து அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து, இலங்கை, சிம்பாப்வே, தென்னாபிரிக்கா, பங்களாதேஸ், ஸ்கொட்லாந்து, அயர்லாந்து, ஐக்கிய அரபு ராஜ்ஜியம் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய 14 அணிகள் இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு விளையாடியிருந்தன.

குழுநிலை போட்டிகள் மற்றும் காலிறுதிப் போட்டிகளின் முடிவில் தென்னாபிரிக்கா, நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா, இந்தியா அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவானதுடன் இறுதிப் போட்டிக்கு போட்டிகளை நடத்திய அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து அணிகள் தெரிவாகின.

மார்ச் 29 அன்று மெல்பேர்ன் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மைக்கல் க்ளார்க் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி ஏழு விக்கட்டுக்களால் இலகுவாக வெற்றி பெற்று ஐந்தாவது தடவையாக சம்பியனானது. போட்டியின் நாயகனாக ஜேம்ஸ் பௌக்னர் தெரிவானதோடு தொடர் நாயகனாக அவுஸ்திரேலிய அணியின் மிச்சல் ஸ்டார்க் தெரிவானார்.

### பன்னிரண்டாவது உலகக்கிண்ணம் 2019




12-வது உலகக் கிண்ண கிரிக்கட் சுற்றுத் தொடர் இம் மாதம் 30ஆம் திகதி தொடக்கம் ஜூலை 14ஆம் திகதி வரை இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் நடைபெற உள்ளது. இத் தொடரில் இங்கிலாந்து அவுஸ்திரேலயா, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து, இலங்கை, தென்னாபிரிக்கா, பங்களாதேஸ், மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய பத்து அணிகள் பங்கு பற்றவுள்ளன. முதலாவது போட்டி எதிர்வரும் 30-ம் திகதி இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையில் தி ஓவல் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. பங்கு பற்றும் பத்து அணிகளும் ஒன்றையொன்று எதிர்த்தாடி அதிலிருந்து முதல் நான்கு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தெரிவாகவுள்ளன. இறுதிப் போட்டி




எதிர்வரும் ஜூலை மாதம் 14ஆம் திகதி லண்டன், லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இத் தொடரில் பங்கு பற்றவுள்ள திமுத் கருனாரட்ன தலைமையிலான இலங்கை அணி தமது முதல் போட்டியில் ஜூன் முதலாம் திகதி நியுசிலாந்து அணியை எதிர்த்தாடவுள்ளது.

இம்முறை கிண்ணம் வெல்லக்கூடிய வாய்ப்புகள் அதிகமுள்ள அணிகளாக இந்தியா, இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் எதிர்பார்க்கப்படுகின்றன. எனினும் கிரிக்கட் போட்டிகளை பொறுத்தவரை இறுதி வரை எதையும் தீர்மானிக்க முடியாத நிலை காணப்படுகிறது. திறமையுடன் அதிர்ஸ்டமும் கைகொடுக்கும் அணிகளில் ஒன்று இம்முறை சம்பியன் கிண்ணத்தை தனதாக்கவுள்ளது. எவ்வாறாயினும் அடுத்துவரும் ஒன்றரை மாத காலப்பகுதி உலக கிரிக்கட் ரசிகர்களுக்கு மாபெறும் விருந்தாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## செங்கலடி கோல்ட் ஸ்டார் வெற்றி



(பேரின்பராஜா சபேஷ்)

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் மகளிர் எல்லே தொடரில் ஏறாவூர்ப்பற்று சார்பாக பங்குபற்றிய செங்கலடி கோல்ட் ஸ்டார் இளைஞர் கழகம் சம்பியனானது.

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் மகளிர் எல்லே போட்டி சனிக்கிழமை (26) கல்லடி சிவானந்தா மைத்தனத்தில் நடைபெற்றது.

இச்சுற்றில் இறுதிப்போட்டி ஏறாவூர்ப்பற்று மற்றும் கோறளைப்பற்று தெற்கு பிரதேச இளைஞர் கழகங்களிடையே நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஏறாவூர்ப்பற்று சார்பில் பங்குபற்றிய செங்கலடி கோல்ட் ஸ்டார் இளைஞர் கழக அணி, களத்தடுப்பினை தெரிவுசெய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கோறளைப்பற்று தெற்கு (கிரான்) பிரதேச அணி வழங்கப்பட்ட 30 பந்துகளில் 5 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெத்தாடிய கோல்ட் ஸ்டார் அணி 9 பந்துகள் மீதமிருக்க 6 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

# அறிவோம் - தெளிவோம் - பகிர்வோம் - 37

## க.பொ.த. (உ/த) - புதிய பாடத்திட்டம் - தமிழ்

- மட்டுநகர் யுவன் -

# கற்போம்

### இலக்கணம்

1. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் பற்றிக் கூறுக.

பன்னீர் உயிரும் கசதந பமவய
ஞஙு ஈரைந்து உயிர்மெய்யும் மொழி முதல்.
(நன். சூ. 102)

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ஙு ஆகிய பத்து உயிர்மெய் எழுத்துக்களும் மொழிக்கு அதாவது சொல்லுக்கு முதலில் வரும். இது, பொதுவாகச் சொல்லப்பட்ட விளக்கமாகும். இதை மேலும் வகுத்து நோக்குதல் வேண்டும்.

(i) பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் வருதல்:

(உ-ம்): அழகு, ஆடை, இன்பம், ஈட்டி, உயிர், ஊற்று, எறும்பு, ஏர், ஐயர், ஒன்று, ஓர்மம், ஔவியம்.

(ii) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பத்தும் பன்னிரண்டு உயிர்களுடனும் சேர்ந்து மொழிக்கு முதலில் வருவதில்லை. அதற்குச் சிறப்பு விதிகள் கூறப்பட்டுள்ளன. ஆக, இந்தப் பத்திலும் ஆறேயாறுதான் பன்னிரண்டு உயிர்களுடனும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும். அவற்றைப் பார்ப்போம். அவை வருமாறு:

க், ச், த், ந், ப், ம் ஆகியவை அகரத்துடன் சேர்ந்து க, ச, த, ந, ப, ம என உயிர்மெய்யாகி வந்தது போல் ஏனைய உயிர்களுடனும் சேர்ந்து வருதல்.

(உ-ம்): கண், சரிவு, தங்கை, நகை, பனை, மலை.
(அகரத்துடன் சேர்ந்து வந்தது)

காது, சாரல், தாகம், நார், பார், மார்பு.
(ஆகாரத்துடன் சேர்ந்து வந்தது)

கிளவி, சிரிப்பு, திலகம், நிலவு, பின்னல், மின்னல்.
(இகரத்துடன் சேர்ந்து வந்தது)

- இவ்வாறு ஏனைய உயிர்களுடனும் சேர்ந்து வருவதற்குரிய உதாரணங்களை அறிந்துகொள்க.

(iii) உஊ ஒஓ வலவொடு வம்முதல்.
(நன். சூ. 103)

இந்த நான்கு எழுத்துக்களும் **அல்லாத** ஏனைய அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ ஆகிய எட்டு உயிர்களுடனும் சேர்ந்து வகரம் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்): வழி, வாழ்த்து, விழி, வீழ்ச்சி, வெற்றி, வேந்தன், வைகறை, வௌவால்.

(iv) அஆ உஊ ஓஔ யம்முதல்.
(நன். சூ. 104)

இந்த ஆறு (அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ) உயிர்களுடனும் சேர்ந்து யகரம் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்): யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.

(v) அஆஎ ஒவ்வொடு ஆகும் ஞம்முதல்.
(நன். சூ. 105)

இந்த நான்கு உயிர்களுடனும் (அ, ஆ, எ, ஒ) சேர்ந்து யகரம் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்): ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கல்.

(vi) சுட்டி யா எகரம் வினாவழி அவ்வை
ஒட்டி ஙவ்வு முதலாகும்மே.
(நன். சூ. 106)

சுட்டெழுத்துக்கள் மூன்றும் யா, எ என்னும் வினா எழுத்துக்கள் இரண்டுமாகிய இந்த ஐந்து எழுத்துக்களின் பின்னே 'ங' என்பது அகரத்துடன் மாத்திரம் சேர்ந்து 'ங' என மொழிக்கு முதலில் வரும்.

ஙகரம் மொழிக்கு முதலில் வருதல் என்பது முன்னர் கூறியவற்றைப் போலல்லாது சற்று வித்தியாசமாக வரும். அதை இங்கு பார்ப்போம்.

'ங்' எனும் மெய் அகரத்துடன் சேர்ந்து 'ங' என உயிர்மெய்யாய் அமையும். இடத்தையும் தன்மையையும் குறித்து நிற்கும் 'ஙனம்' என்பது பலபொருள் குறித்த ஒரு சொல் என்பர். 'ஙனம்' என்பது நேரடியாக மொழிக்கு முதலில் வராது என்பதும் அந்த 'ஙனம்' என்பது அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களையும் வினா எழுத்துக்களுள் யா, எ என்னும் வினா எழுத்துக்களையும் அடுத்தே 'ஙனம்' என்னும் சொல் வரும் என்பதும் நன்னூலாரின் கரத்தாகும்.

(உ-ம்): அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம்.

- 'ங' மொழிக்கு முதலில் வரும் எண்ணிக்கை தொடர்பாகக் கருத்துக் கூறுமிடத்து 'ஒன்று' என்றுதான் தெரிவிக்க வேண்டும். மாறாக 'ஐந்து' என்று தெரிவிக்கக்கூடாது. ஏனெனில் 'ங' என்பது அ, இ, உ. யா, எ என்னும் ஐந்து எழுத்துக்களுடனும் சேர்ந்து வராமையும் இந்த ஐந்து எழுத்துக்களை அடுத்து வருகின்றமையுமே ஆகும்.

2. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எத்தனை என்பதைத் தெளிவாகத் தருக.

| | |
|---|---|
| (i) பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் வருதல். | 12 |
| (ii) க், ச், த், ந், ப், ம் ஆகியவை அகரத்துடன் சேர்ந்து க, ச, த, ந, ப, ம என உயிர்மெய்யாகி வந்தது போல் ஏனைய உயிர்களுடனும் சேர்ந்து வருதல். (6 x 12) | 72 |
| (iii) அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ ஆகிய எட்டு உயிர்களுடனும் சேர்ந்து வகரம் வருதல். | 08 |
| (iv) அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ ஆகிய ஆறு உயிர்களுடனும் சேர்ந்து யகரம் வருதல். | 06 |
| (v) அ, ஆ, எ, ஒ ஆகிய நான்கு உயிர்களுடனும் சேர்ந்து யகரம் வருதல். | 04 |
| (vi) அ என்னும் ஒரு உயிருடன் சேர்ந்து ஙகரம் வருதல். | 01 |
| | ------ |
| | 103 |
| | === |

## பிரிவுதான் இல்லையே!

- யூனா -

நல் லிணக்கம் என்று சொல்லி
நாள் கடத்தும் வேலை வேண்டாம்
சொல் கனக்கும் பேச்சில் என்ன
சுகங் கள்தான் கண்டு விட்டோம்
வல் வினைகள் செய்து சிலர்
வாழ்க்கை தனை உயர்த்திக் கொண்டு
நில் லிதைச்செய் நீயதைச் செய்யென்று
நீதியற்ற வழி காட்டியது போதும்.

பிரிவு உண்டெனில் மட்டுமே நமக்குள்
பிணக்கு கள்தீர்க்க வழி வேண்டும்
பரிவு கொண்டு வாழும் நமக்குள்நற்
பாசப் பிணைப் பொன்றே தேவை
உரிமை யுள்ளநம் முண்மை யுறவுக்குள்
உள்ளம் தொலைத்த அரசிய லின்று
கரிய எண்ணங் கொண்டுடுருவி நம்மைக்
கலைக்கப் பார்க்கிறது கவனம்! கவனம்!

பக்க அனுசரணை



தொடர்ச்சி...

# எப்போது இந்த நிலை மாறும்?

இன்றியமையாதது.

நான் பிள்ளைகளை ரியூசன்களுக்கு அனுப்ப வேண்டாம் என்று சொல்லவில்லை. ரியூசன்கள் மீது காட்டும் அக்கறையை பாடசாலை மீதும் செலுத்துங்கள் என்றுதான் சொல்கிறேன். பாடசாலைக் கல்வியை ஒதுக்கி ஒரு பாடத்திற்கு ஒன்பது இடத்தில் வகுப்பிற்கு அனுப்பும் பெற்றோர்கள் இருக்கும் வரை எமது சமூகத்தின் தலை நிமிராது, இந்த உலகைப் பார்க்க.

பெற்றோர்களே, எமது சமூகம் மாற்றம் காண வேண்டும் எனின் ஒவ்வொரு மாற்றத்தையும் உங்கள் மனதிலிருந்து ஆரம்பியுங்கள்.

*குறிப்பு* : இது தவறு என்றால் இனி இவ்வாறு மறந்துகூட எழுதமாட்டேன். உங்கள் தவறுகளை மறைக்க நான் எழுதியது தவறு என்றால் நீங்கள் மாறும் வரை எழுதுவேன்.

மாற்றம் நடைபெறும் என்ற நம்பிக்கையில்,

தொடர்ச்சி...

# அமிர்தகளி விநாசிப்பரிசாரியாரும் காத்தான்குடி ஈசிப்பாசியாரும்

அவர் மகள் ஜெயமலர் அவரின் கீழ்ப் பயிற்சி பெற்று சித்த வைத்திய நிலையத்தில் தந்தைக்கு உதவியாக இருக்கிறார். மூன்றாவது தலைமுறை அது.

அவரை நாடியும் காத்தான்குடியிலிருந்து நோயாளிகள் வருகிறார்கள்.

வைத்திய உறவு தலை முறை, தலை முறையாக இற்றைவரை தொடர்கிறது. ஆழ வேரோடிய மனித உறவுகள் இவை. யாராலும் அறுக்க முடியாத உறவுகள் இவை

தொடர்ச்சி...

# கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை யூன் 27ஆம் திகதி முதல்...

வழங்குவோர் அங்குள்ள பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் சோதனை கண்காணிப்பின் பின்னரே மேற்கொள்ளமுடியும்.

ஆலயத்திற்கு வரும் அடியார்கள் பாதயாத்திரீகர்கள் அனைவருக்குமாக தண்ணீர்த்தாங்கிகள் வைக்கப்படவேண்டும். காட்டிற்குள்ளும் தண்ணீர்தாங்கி அல்லது வசுசர் வைப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. வழமைபோன்று சிவதொண்டன் அமைப்பினர் தண்ணீர்வைக்க முன்வந்தனர்.

தொடர்ச்சி...

# அனர்த்தகால உளவியல் முதலுதவி - பகுதி 05

## சாந்த வழிமுறைகள்

சாந்த வழிமுறைகளைக் கையாளுவதனூடாக பயம்,அந்தரம், மனக்கொந்தளிப்பு எனபவற்றைக் கட்டுப்படுத்தி மனதை அமைதிப் படுத்தலாம். இவற்றை முன்னரே கற்று நாளாந்தம் செய்து வருவது மிகப் பயனுடையது. எமக்கு உதவக்கூடிய இத்தகைய வழிமுறைகளில், நான்கு விதமான பயிற்சி முறைகள் இருக்கின்றன.

## சுவாசப் பயிற்சி (பிராணாயாமம்)

மன அமைதியற்ற நிலையில் சுவாசமானது ஒழுங்கற்றதாகவும், ஆழமற்றதாகவும் காணப்படும். இதனால் உடல் ரீதியாகப் பல மாற்றங்கள் ஏற்படும். சுவாசத்தை ஒழுங்காகவும், ஆழமாகவும் நெறிப்படுத்துவதனால் மேற்குறிப்பிட்ட உடல், உள மாற்றங்களை எதிர்த்து மனச்சாந்தியை உண்டாக்கலாம்.

## சாந்தியாசனம்

நெருக்கீடு நிலைகளில் தசைகளின் இறுக்கம் தொடர்ந்து இருப்பதனால், உடல் ரீதியாகச் சில அறிகுறிகள் தோன்றலாம். (உதாரணமாக தலையிடி, கபாலக்குத்து, பிடரி நோ, கழுத்துப் பிடிப்பு, களைப்பு) மேலும் உளரீதியாகப் பயம், பதற்றம், அந்தரம், திடுக்கிடுதல் போன்ற அறிகுறிகள் தென்படலாம். இவ்வாறான உள, உடல் மாற்றங்களிலிருந்து விடுபடப் படிப்படியாகத் தசைகளைத் தளரச் செய்யும் பயிற்சி அமைதியினை உருவாக்கும். சாந்தியாசனம் நித்திரை கொள்வதற்கு நல்ல முறையாகும். எனவே நித்திரைக் குறைபாடுடையவர்கள் இப்பயிற்சியை மேற்கொள்வதன் மூலம் பயனடையலாம். நித்திரை கொள்வதற்காகப் படுத்தவுடன் இதனைச் செய்யலாம் அல்லது நித்திரை குழம்பிய நேரத்தில் செய்யலாம்.

## மந்திர உச்சாடனம்

ஒரு சொல்லை அல்லது ஒரு சொற்றொடரைத் திரும்பத் திரும்ப ஒரேவிதமாக உச்சரிக்கும் பொழுது அது பாதிக்கப்பட்டவர்களுக்கு மன அமைதியை ஏற்படுத்தும். மனம் சாந்தமாகிறபோது உடலும் ஒரு தளர்வான நிலையை அடையும். இந்து சமயத்தவர் 'ஓம்' என்ற சொல்லையும் கிறிஸ்தவர்கள் ' யேசுவே இரட்சியும்' என்ற சொல்லையும் இஸ்லாமியர்கள் 'சுபகனல்லா' என்ற சொல்லையும் திரும்பத் திரும்ப ஒரேவிதமாக 50-100 வரை உச்சரிக்கலாம்.

## தியானம்

தியானிப்பதற்கு ஒரு பொருளைத் (குறி) தேர்ந்தெடுப்பது முக்கியம். தியானிக்கும்போது மனதை ஒருமுகப்படுத்தி தேர்ந்தெடுத்த பொருளில் தொடர்ச்சியாகச் செலுத்தவும். அல்லது கண்களை மூடி சுவாசத்தை(உள்,வெளி) அவதானித்து நூறு வரை எண்ணலாம்.

தொடர்ச்சி...

# சேட்டைக் கழட்டுங்க முதல்!

**சரி, இப்போது நேரடியாக சிக்கலுக்கு வருவோம். ஆண்கள் கோவிலுக்குள் மேலாடையைக் கழற்றுவது இந்தக் காலத்திலும்அவசியமானஒன்றா? ஆம் என்று அடித்துக்கூறி சமூக வலைத்தளங்களில் சுவையான காரணம் ஒன்று பகிரப்படுகிறது. என்னவென்று தெரியுமா? கதிர்வீச்சு!**

**கதிர்வீச்சு என்றால், நீங்கள் எக்ஸ்றே, புற ஊதாக்கதிர்கள், ஐயோ! ஓசோன் படையில் ஓட்டை என்றெல்லாம் பெரிய அளவில் நினைத்துவிடக்கூடாது. நமது திரு.பேஸ்புக் விஞ்ஞானி அவர்களின் கருத்துப்படி, இங்கு சொல்லப்படும் கதிர்வீச்சு, நம் ஆலயங்களில் மட்டும் பூசை நேரத்தில் மந்திரங்கள் ஒலிக்கும் போது வெளியேறும் இறைசக்தி! இறைவனின் திருவருள் பூசை நேரத்தில் கருவறையிலிருந்து பரவுமாம். ஆண்கள் வெற்றுடலுடன் நிற்கும் போது அந்தக் கதிர்வீச்சு அவர்கள் மீது படிவதால், திருவருளை முழுமையாகப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், சட்டை போட்டால், அந்த கதிர் நம்மீது படாது!**

**சரி, ஆண்களென்றால்சட்டையைக்கழற்றிநிற்க லாம். ஐயோ, பெண்களுக்குஎன்னசெய்வது? அப்படிவாவழிக்கு! நம்முன்னோர்கள் ஒன்றும் முட்டாள்களில்லை. அதற்குத் தான் அவர்கள் பெண்களை அதிகளவில் ஆபரணங்களை அணியச் சொன்னார்கள். (எந்த சமயப்புத்தகத்தில், எந்த திருமுறைலசொன்னாங்கள் எண்டு நீங்க கேக்கக்கூடாது!) பெண்கள் அணியும் பட்டாடைகளும் தங்க நகைகளும் இறைவன் திருவருளை ஈர்த்து, ஆண்கள் பெறும் அதே திருவருளை அவர்களுக்குப் பெற்றுத்தரும். எப்படி பேஸ்புக் சமத்துவம்?**

**விஞ்ஞானிகளுக்கும் ஒருபடிமேலேபோய் இப்படியெல்லாம் இட்டுக்கட்டும் அதிமேதாவிகளை கண்டால் தூக்கிப்போட்டு நான்கு சாத்து சாத்தவேண்டும் போல் தோன்றும். சத்தியமாக நம் சமயத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக அறிவியல் ஒளிந்திருக்கிறதுதான். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அதற்காக சபைக்கட்டுச் சொல்லி, கண்ட மரபுகளையும், வழக்காறுகளையும் நியாயப்படுத்த முயலும் இந்த வதந்தி பரப்புநர்களை எந்த அவசரகால சட்டத்தை அமுல்படுத்தி தூக்கி உள்ளே போடலாம்?**

**சும்மாவே யோசியுங்கள். விஞ்ஞானத்தை மீறிப் பரவும் அந்தக் கதிர்வீச்சால் கேவலம், ஒரு சட்டைத்துணியை ஊடுருவ முடியாமல் இருக்கும் போது, எப்படி அதைதெய்வீகசக்திஎன்பீர்கள்? சரி, முன்னோர் முன்னோர் என்கிறீர்களே, உங்கள் கண்டுபிடிப்பை - இறைவன் முன் வெற்றுடலுடன் நில், பெண்ணே நகைஅணியாமல்கோவிலுக்குப்போகாதே என்பதை - பூடகமாகவேனும் ஏன் எந்த நாயன்மாரும் அருளாளரும் பாடவில்லை?**

**உண்மையைச்சொன்னால், சமகாலத்திலஆண் கள்கோவிலுக்குள்சட்டையைக்கழற்றுவதில்எந் தவிதபொருத்தப்பாடும்இல்லை. இன்றுஉடலை முழுவதும்மூடிஇருப்பதுதான்நாகரிகம், பண்பாடு. கிராமப்புறங்களில் கூடக் கண்டிருப்பீர்கள். நன்கு வியர்த்து வழியும் வேலை செய்யும் விவசாயிகள், கூலித்தொழிலாளர்கள், விளையாட்டுவீரர்கள்கூடஅங் கும்அரிதாகத் தான் மேலாடையைக் கழற்றுகிறார்கள்.**

**நகரங்களில், பூங்காக்களில் ஒருவன் அரைநிர்வாணமாக நின்றால் எப்படி முகம் சுழிப்பீர்களோ, அப்படித்தான் கோவிலில் ஆண்கள் வெற்றுடலுடன் நிற்பதையும் பார்க்கவேண்டும். அதற்கு மட்டும் புனிதப் பூச்சூபூச வேண்டிய தேவை எதற்கு?**

**(தொடரும்)**

தொடர்ச்சி...

# இழிநிலையன்றி வேறென்ன?

முயலுகின்ற போக்கானது உண்மையான வரலாற்றுக்கு எதிரானது. ஏனைய பிரதேசங்களின் வரலாற்றை மறுத்து சிறுமைப்படுத்துகிற உள்நோக்கம் கொண்டதாகும். இல்லாவிட்டால் அம்பாறை-திருக்கோவிலுக்கு சங்கிலியனுக்கும் என்ன தொடர்பு, எதற்காக சங்கிலியனுக்கு அங்கே பிண்டம் வைத்து பிதிர் கொடுக்க யாழ்ப்பாணத்திலிருந்து சச்சுதானந்தம் வரவேண்டும்?

பல்லின மக்களின் ஒருமித்த வாழ்வியலை அடிநாதமாக கொண்ட பன்மைத்துவ வரலாற்றை மறைக்கின்ற போக்கிரித்தனம் ஆகும்.

இந்தச் சங்கிலியனை ஈழத் தமிழர்களின் வரலாற்று பெருமானாகக் காட்ட முயல்கின்ற போக்கு இப்போது ஆரம்பிக்கப்பட்டதல்ல. தமிழரசு கட்சியினரின் தமிழீழப் பிரசாரக் காலங்களில் இது தொடங்கி விட்டது. கிழக்கு மாகாணத்துக்கு வந்தால் தமிழீழத்தின் தலைநகர் திருமலை என்றும் வடக்குக்கு சென்றால் தமிழீழத்தின் பாராளுமன்றம் நல்லூரிலுள்ள சங்கிலியன் தோப்பில் அமையுமென்றும் தமிழரசு கட்சியினர் பிதற்றி திரிந்த வரலாறுகளுண்டு. அதன் தொடர்ச்சிதான் இந்த பித்தலாட்டங்கள் ஆகும்.

இந்த சங்கிலியன்தான் 1542ஆம் ஆண்டு 600க்கும் அதிகமான மன்னார் மக்களை, கிறிஸ்தவத்துக்கு மாறினார்கள் என்பதற்காக படுகொலை செய்தவன். சாதிவெறியும் மதவெறியும் கொண்டலைந்த சங்கிலியன் போன்றோர் சனாதன வர்க்கத்தின் பிரதிநிதிகளேயன்றி சாமானியர்களின் பிரதிநிதியல்ல. இதுபோன்றவர்களை முன்னோடியாகவும் வரலாற்று நாயகர்களாகவும் காட்டமுனைவது அபத்தமானதாகும்.

தமிழரின் தொன்மை வரலாறென்பது பன்மைத்துவம் நிறைந்தது, யாதுமூரே யாவரும் கேளிர் என்பதுதான் தமிழரின் முதுசமான பொன்வாக்கு ஆகும், அதனை மறுத்து தமிழரின் வரலாற்றை இந்துக்களின் வரலாறாக காட்டுவதும் அதனை சைவத்துக்கு மட்டுமானதாக நிறுவ முனைவதும் வரலாற்றின் பன்மைத்துவ ஜனநாயகத்துக்கு எதிரானது ஆகும்.

தமிழை வளர்த்தமையிலும் உலகளாவிய இலக்கியங்களையும் நீதி நெறிகளையும் வழங்கியமையிலும் பௌத்தம், சமணம் போன்றவற்றுக்கு நிராகரிக்க முடியாத பாத்திரங்களுண்டு. அதனை மறுத்தால் நாம் ஐம்பெரும் காப்பியங்களையும்கூட இழக்கவேண்டியிருக்கும்.

குண்டலகேசியும், வளையாபதியும், மணிமேகலையும் தமிழ் பௌத்தம் தந்த காப்பியங்கள். சிலப்பதிகாரமும், சீவக சிந்தாமணியும் தமிழ் சமணர்கள் தந்த காப்பியங்கள். உமறுப்புலவரது சீறாப்புராணம் இஸ்லாமிய காப்பியம், சமணத்து வள்ளுவன் தந்த திருக்குறளே தமிழினத்தின் நீதிநூலாகும். இவற்றையெல்லாம் மறுத்துக்கொண்டும் புறமொதுக்கியும் தமிழர் வரலாறு இருக்கமுடியாது..

இந்தப் பன்மைத்துவ வரலாறுகளை புறமொதுக்கி விட்டு நாம் ஆரிய சக்கரவர்த்திகளின் வழித்தோன்றலாக சனாதன சைவத்தையும் சாதிவெறியையும் கட்டிக்காத்த சங்கிலியனுக்கு விழா எடுக்கும் நிலையிலிருப்பது இழிநிலையன்றி வேறென்ன?

AGNI
PULAYAVELY
INDUSTRIES

# அக்கினி புலையவெளி உணவு உற்பத்திப் பொருட்கள்

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர்

ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:- 0771516203

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு





## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

100 கிராம் 60 ரூபாய்
200 கிராம் 110ரூபாய்

## மிக்சர்

1 கிலோ 300ரூபாய்

எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

FCC SUPER MALL
4 Wings for Uplift Your life

PHARMACY — TIP TOP HEALTH CARE
SUPER MARKET — CITY CENTRE
BUDGET SHOP — CASH & CARRY, Young Forever
CAFETERIA — FCC Cafe

இல.16, மத்திய வீதி, மட்டக்களப்பு.
TP: 0652222722,
Hotline: 0772072722

சிறப்புத் தள்ளுபடி விலையில் வழங்குகின்றோம்.

அங்கர் 1kg 870/= 400g 350/=
உருளைக்கிழங்கு 1kg 110/=
பருப்பு 1kg 115/=

வெள்ளைச் சீனி 1kg 100/=
சிவப்புச் சீனி 1kg 115/=




CALL / SMS / WHATSAPP YOUR REQUEST TO US 065 22 22 221 065 22 22 722 077 20 72 722

** நிபந்தனைக்குட்பட்டது
** Condition applies

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa